# திருவருட்பா ஆராய்ச்சி

4 JUN 1975



TNSDA
04799

ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், மதராஸ்.

1949

உ

திருவருட் பிரகாச வள்ளலாரெனும்

# சிதம்பரம்
# இராமலிங்க சுவாமிகளின்
# சரித்திரமும்

# அருட்பா ஆராய்ச்சியும்

இயற்றியவர்.

திருவாளர் உ. மா. துரைசாமிப் பிள்ளை.

4 JUN 1975

ஒற்றுமை ஆபீஸ்,

தியாகராயநகர் :: சென்னை.

விலை ரூ. 2.

294.5513
ஹோர
4799
4 JUN 1975

Rayan Press, Madras-1.

# முகவுரை

திருவருட் பெருஞ்செல்வரும் வள்ளலுமாகிய ஸ்ரீமத் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளது கொள்கைகள் இக்காலத்தில் எல்லா மதத்தராலும் எல்லா ஜாதியாராலும் கொண்டாடப் பட்டு வருவது சகலரும் அறிந்ததே. சுவாமிகளது கொள்கைகளும், பக்தி முறைகளும், கடவுள் வழிபாட்டு நெறிகளுமாகிய அரிய வழிகள் அத்துணையும் சகலரும் பின்பற்றக்கூடிய அவ்வளவு எளிய நிலைமையிலுள்ளவை. சுவாமிகளுடைய இத்தகைய கொள்கைகள் யாவும் நிரம்பித் ததும்பும் பொக்கிஷம் அவர்களருளிய திருவருட்பாவே யாகும். எனவே திருவருட்பாவின் ஆறு திரு முறைகளிலும் பயின்று பயின்று, சுவாமிகளது அரும் பெருங் கொள்கைகள் அனைத்தையும் கண்டு மகிழ்ந்து அநுபவிப்பதற்குச் சில வாழ் நாள், பல்பிணிச் சிற்றறிவும், பெருந்தொல்லையு முடைய நம்மனோர் பலருக்கும் எளிதில் கூடுவதன்று. ஆதலாலும், சுவாமிகள் திருவடிகளில் எனதன்பினை மாலையாகச் சாத்தும் பேறு பெறுவது எப்படி என்ற நீண்டகாலப் பேரவா தூண்டி வந்த காரணத்தால் சுவாமிகளின் அந்நூலையே வாசித்துக் குறித்து வந்த எனது குறிப்புகளையும், சுவாமிகளைப்பற்றிப் பிறர் எழுதிய நூல்களைப் பார்த்த காலத்தில் எடுத்துக் கொண்ட முக்கியமான விஷயங்களையும், ஒரு சேரத் திரட்டி வெளியிடின், திருவருட்பாவை பல கால் பயின்ற பின் அடையும் பலன் எளிதில் கைகூடும் வண்ணமாக இது பயன் படுமென்ற எண்ணத்தாலும் யான் இச்சிறு பதிப்பை வெளியிடஆர்வங்கொண்டேன். சுருங்கக்கூறின் இவ்வெனது சிறுமுயற்சியானது திருவருட்பாவைப் படிக்கத்தூண்டுதல் செய்யும் கருவியாகவும், அதன் உண்மை

களை அறிந்தின்புறுவதற்கொரு திறவு கோலாகவும் ஆகு மென்பது எனது கருத்து.

இந்த எனது முயற்சியில் ஏதேனும் திருத்தப்பாடும் சேர்க்கைப் பாகமும், கண்டு தெரிவிக்கும் மெய்யன்பர் கட்கு யான் நன்றியறிதலுடையேன். அன்றி மறுபதிப் பில் அவ்வன்பர்கள் பெயராலும் வெளியிட விழைகின் றேன்.

குற்றம் மனிதரியற்கை; பொறுப்பது தெய்வ சக்தி யென்பர். ஆதலின் பெரியார் இவ்வெனது ஊக்கத்திற்கு உவந்து இம்மெய்ப்பொருளின் ஆர்வம் உலகில் விஞ்ச அருள் புரிவார்களாக.

திருவருட் செல்வனூர் திருவடி வெல்க!

இங்ஙனம்

உ. மா. துரைசாமி

## ஸ்ரீ மத். கோ. வடிவேலுசெட்டியாரவர்கள் அபிப்பிராயம்

ஸ்ரீமத் உ. மா. துரைசாமிப்பிள்ளையவர்கள் எழுதிய "திருவருட் பிரகாசவள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரமும், அருட்பா ஆராய்ச்சியும்" என்னும் தலைப்பினையுடைய கையெழுத்துக் காகிதப் பிரதியை யான் முற்றும் படித்துப்பார்த்தேன். இக்காகிதக் கையெழுத்துப் பிரதி வடிவப் புத்தகம் இருபது பகுதியாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தைப் படிப்பவர்கள் திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகளவர்களது திருவுள்ளக் கிடக்கையை மிகவெளிதாக அறிந்து கொள்ளுதல் கூடும். ஷை சுவாமிகளவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருவருட்பாவை ஊன்றிப்படியாது குறை கூறுகின்றவர்க்கு இஃது உய்யு நெறிகாட்டும் ஓர் உத்தம நூலாம் என்பது ஷை பிள்ளையவர்கள் பல வருடகாலம் ஆராய்ந்தெடுத்தெழுதியுள்ள அருட்பாக்களின் மேற்கோள்களால் தெள்ளிதின் விளங்குவதாம். ஷை பிள்ளையவர்கள் எழுதிய இப்புத்தகத்தை ஊன்றிப் படிப்பவர்கள் சாதி சமயவழக்குப் பேசி வாதிடுவதொழிந்து, எல்லாம் சிவமயமேயென்னும் துணிபுடையவராய், வான்பார்க்கும் பைங்கூழ்போல் ஈசனருளொன்றையே நோக்கியிருப்பரென்பது எனது அபிப்பிராயம். ஷை பிள்ளையவர்கள் செவ்விய நடையில் பன்னூலாராய்ச்சி செய்து, தக்க மேற்கோள்களுடன் அருட்பாவின் பொருட் செறிவினை நம்மனோர் கண்டுய்ய எழுதித்தந்த இப்புத்தகமானது தமிழுலகத்தில் என்றும் பூரணச்சந்திரன்போல் விளங்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

வேதாந்த சங்கம்,<br>சிந்தாதிரிப்பேட்டை,

இங்ஙனம்<br>கோ. வ.

## திருவாளர் T. P. மீனுக்ஷிசுந்தரம்பிள்ளை, M. A., B. L., M. O. L.

### அபிப்பிராயம்

திருவாளர் துரைசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய திருவருட்பா ஆராய்ச்சியினை மேனுேக்காகப் பார்க்கும் பேற்றினை இன்று பெற்றேன். இராமலிங்கரது திருவருட்பாவே இக்காலத்துத் திருமறையாக விளங்குகின்றது. அதனிடம் குற்றம் கண்ட பெரியோர்களே இதுகாலை அதன் தனிச்சிறப்பியலை எடுத்துக் காட்ட முன்வந்துள்ளார்கள் என்ருல் அதன் பெருமையை என் என்பது? ஆனுல் அந்த நூலோ மிகப் பெரிது; அதனை முற்றும் ஓதுதல் உட்காரவும் போதின்றி ஓடிப் பிழைக்கும் இந்த நாளில் எளிதல்ல. திருவாளர் துரைசாமிப்பிள்ளையவர்களைப்போல திருவருட்பா ஓதுதல் பேரறமாகவும் பேரின்பமாகவும் கொண்ட பெரியோர்கள் அத்திருமுறைகளில் கண்ட சொற்சுவை பொருட்சுவைகளை எடுத்துக் காட்டினுல் தான் மக்கள் பலரும் திருவருட்பாவின் உண்மைத் திறத்தை அறிதல்கூடும். இப்பேருதவி செய்த பிள்ளையவர்க்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். திருவருட்பா என்னும் பேரின்பக் கடலிலிருந்து மேலும் மேலும் இப்பெரியார் அடிகளது அருளால் புதுபுது மணிகளை எடுத்துக் காட்டுவாராக.

| | |
|---|---|
| தமிழகம், | இங்ஙனம், |
| சிந்தாதிரிப்பேட்டை, | தெ. மீனுக்ஷிசுந்தரன் |

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரம் | ... | 1 |
| 2. | பிள்ளையவர்களின் ஒழுக்கம் | ... | 20 |
| 3. | சுவாமியவர்களால் செய்யப்பட்ட நூல்கள் | ... | 32 |
| 4. | சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்திய தென்னை | ... | 24 |
| 5. | இரக்கமே சுவாமிகளின் உயிர், உடல், இரக்கமே அவர் | ... | 28 |
| 6. | தத்துவ வெற்றி | ... | 33 |
| 7. | திருநீறணிதல் | ... | 39 |
| 8. | சமயம், மதம், சாதி | ... | 43 |
| 9. | கடவுள் ஒன்று என்பது | ... | 48 |
| 10. | யாக்கை நிலையாமை | ... | 52 |
| 11. | பக்தி | .... | 54 |
| - | வெறிவிலக்கு | ... | 56 |
| 12. | பிணங்களை புதைத்தல் ஏன்? | ... | 57 |
| 13. | வள்ளலார் காலத்தில் நடந்த அற்புதங்கள் | ... | 59 |
| 14. | இறைவனருள் கிடைத்தல் | ... | 64 |
| 15. | ஓதாதுணர்ந்தது | ... | 71 |
| 16. | உண்மை நெறி | ... | 73 |
| | தமிழ் பாஷையின் சிறப்பு | ... | 76 |

சமய சூக்கும பஞ்சாக்ஷரம் ... 82
சன்மார்க்கக் கொடி ... 86
வேதாகமம் ... 86
சிவம் ... 87
மனித தேகத்தில் சொர்க்கம், நரகம்
இருக்குமிடம் ... 87
17: கற்ப பேதம், காரணம், பவுதிகம், ஏமம், சினம், வெகுளி, தூக்கம், இந்திரியக் காட்சி, கரணக் காட்சி. ஆசை, பரோபகாரம். சத்விசாரம், புருவ மத்தியின் விசேடம், ஜீவகாருணிய மகிமை, பஞ்சகௌவியம்
18. நித்திய வொழுக்க மென்னும்
உலகியல் குறிப்புகள் ... 93
19, அருட்பாவில் வந்துள்ள
சாதாரண பழமொழிகள் ... 97
20. அருட்பாவில் வந்துள்ள புராணங்கள்... 119
21. இறைவன் இலக்கணத்தைப் புகழ்தல்... 132
22. அருட்பாவில் எடுத்தாளும்
வேறு நூல்கள் ... 148
23. சொற் சுவையுள்ள பாக்கள் ... 150

# திருவருட்பா ஆராய்ச்சி

---

## முன்னுரை

திருவருட் பெருஞ் செல்வரும், வள்ளலாரு மாகிய ஸ்ரீமத் சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகளது கொள்கைகள் இக் காலத்தில் எல்லா மதத்தாராலும், எல்லாச் சாதியாராலும் கொண்டாடப் பட்டு வருவது சகலரும் அறிந்ததே. சுவாமிகளது கொள்கைகளும், பக்தி முறைகளும், கடவுள் வழிபாட்டு நெறிகளு மாகிய அரிய வழிகள் அத்துணையும் சகலரும் பின் பற்றக்கூடிய அவ்வளவு எளிய நிலைமையிலுள்ளவை. சுவாமிகளுடைய இத்தகைய கொள்கைகள் யாவும் நிரம்பியுள்ள கருவூலம் அவர்களருளிய திருவருட்பா வேயாகும். எனவே திருவருட்பாவின் ஆறு திருமுறைகளிலும் பயின்று சுவாம்களது அரும் பெருங் கொள்கைகள் அனைத்தையும் கண்டு மகிழ்ந்து அனுபவிப்பதற்குச் சில்வாழ் நாள், பல்பிணி, சிற்றறிவும், பெருந் தொல்லையுமுடைய நம்மனோர் பலருக்கும் எளிதில் கூடுவதன்று.

ஆதலாலும், சுவாமிகளின் திருவடிகளில் எனது அன்பினை மாலையாகச்சாத்தும் பேறு பெறுவதெப் படியென்ற நீண்ட காலப் பேரவா தூண்டி வந்த காரணத்தாலும், சுவாமிகளின் அந்நூலையே வாசித்து

குறித்து வந்த எனது குறிப்புக்களையும், சுவாமி களைப் பற்றிப் பிறர் எழுதிய நூல்களைப் பார்த்த காலங்களில் எடுத்துக் கொண்ட முக்கியமான செய் திகளையும் ஒரு சேரத் திரட்டி வெளியிடின், திருவட் பாவைப் பலகால் பயின்றதால் அடையும் பலன்எளி தில் கை கூடும் வண்ணமாக இது பயன்படுமென்ற எண்ணத்தாலும் யான் எனது குறிப்புகளைவெளியிட ஆர்வங்கொண்டேன். சுருங்கக் கூறின் இவ்வெனது சிறு முயற்சியானது திருவருட்பாவைப் படிக்கத் தூண்டுதல்செய்யுங் கருவியாகவும், அதன் உண்மை களை அறிந்து இன்புறுவதற்கொரு திறவுகோலாக வும் இருக்குமென்பது எனது கருத்து.

தமிழ் நாட்டுப் பல தலங்களிலே சிறந்து விளங் குவது சிதம்பரம். இது பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்று. இதற்கு மேற்கே ஒருகாத தூரத்தில் மருதூர் என் னும் கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் கரு ணீக குலத்தில் இராமைய பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். கல்வியும், அறிவும் நிறைந்தவர். நல்லொ ழுக்க முடையவர். சிவ பக்தர். தன் இல்லத்திற்கு வரும் சிவனடியார்களுக்கு அமுது படைக்கும நிய மம் பூண்டவர். இவர் கிராமக் கணக்கு எழுதிக் கொண்டும், மருதூர் கிராமத்திலும், அயல் கிராமங் களிலுள்ள சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றிக்கொண் டும் காலம் கழித்து வந்தார். இவருடைய மனைவியர் ஒருவர் பின் ஒருவராக ஐவர் இறந்தனர். ஆறுவது முறை செங்கல்பட்டு ஜில்லாவில் பொன்னேரி என் னும் கிராமத்தில் சின்னம்மையென்னும் அம்மையா ரை விவாகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர்.

இவ்வம்மை கற்புக்கரசி. இவ்வம்மையார், சபாபதிப் பிள்ளை, பரசுராமப் பிள்ளை என்னும் இரண்டு ஆண் பிள்ளைகளையும், சுந்தரம்மாள் உண்ணுமுலையம்மாள் என்னும் இரண்டு பெண் பிள்ளைகளையும் பெற்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் உச்சிப் பொழுதில் சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் இவர் வீட்டிற்கு வந்து சின்னம்மையாரிடம் சிறிது உணவு வேண்டினர். "விருந்தோம்பல்" என்பதைக் கடைப் பிடித்த அவ்வம்மையார் உள்ளங்குளிர்ந்து முகமலர்ச்சியுடன் அவருக்கு அமுது படைத்தனர். சாப்பிட்டுப் பசிதணிந்து சின்னம்மையாருக்கு விபூதி கொடுத்து "நீ இதனை உட்கொள்; ஒரு ஆண்மகவைச் சீக்கிரத்தில் பெறுவாய்!" என்று வாழ்த்தினார். திருநீறு பெற்ற அம்மையார் ஒதுங்கி நிற்கச் சிவயோகியராய் வேடம் பூண்டு வந்த சிவபிரான் மறைந்தனர்.

[ஆறுவது திருமுறை-தத்துவ வெற்றி-19-வது செய்யுளில் கடைசிவரி- "கடவுள் மகிழ்ந்தளித்த தனிக் கதிர்ப்பிள்ளை நானே" என்பதைக் காண்க].

வெளியே போயிருந்த இராமையபிள்ளை வீட்டிற்குத் திரும்பிவந்தார். நிகழ்ந்ததை அம்மையார் சொல்ல, இவரும் சந்தோஷமடைந்தனர். சிவயோகியர் சொல்லிப் போனபடி சின்னம்மையார் கர்ப்பவதியாகி கலியுகம் 4925-ல் சுபானு வருஷம், புரட்டாசி மாதம் 21-ம் தேதி (அதாவது 5—10—1823-ல்) ஞாயிற்றுக் கிழமை, மீன லக்கினத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தனர். இப்பிள்ளைக்கு இராமலிங்கம்

என்னும் பெயர் இடப்பட்டது. குழந்தை பிறந்த ஐந்தாம் மாதம் சிதம்பரம் சென்று நடராஜப்பெருமானைத் தரிசித்தார்கள். ஐந்து மாதத்திய கைக்குழந்தை பெருமானைப் பார்த்துச் சிரித்தது. இதனைக் கண்ட எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். ஆறும் மாதத்தில் இராமையபிள்ளை சிவனடி அடைந்தனர். எட்டாம் மாதத்தில் குடும்பத்திற்கு மூத்தவராகிய சபாபதி பிள்ளை எல்லாரையும் அழைத்துக்கொண்டு தங்கள் பாட்டியார் வீட்டிற்கு வந்து தங்கினர்.

பிறகு சென்னைக்கு வந்து காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் சபாபதி பிள்ளையும், தமிழிலே இலக்கிய இலக்கணம் போதுமானவரையில் கற்றனர். சபாபதி பிள்ளை உபாத்தியாயரா யிருந்தும், புராணப் பிரசங்கம் செய்தும் பொருளீட்டித் தமது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். பிள்ளைப் பெருமானுக்கு மூன்று வயதாயிற்று. மறுமுறை தாயாரும் மற்றவர்களும் சிதம்பரம் சென்றனர். இப்போதும் மூன்று பிராயமுள்ள இராமலிங்கம் தீபாராதனை செய்கையில் அதன் ஜோதியைக் கண்டு ஆனந்தமுற்று அதனைத் தாயாருக்குக் காட்டினர்.

[ஆறுவது திருமுறை- அருள்விளக்கமாலை. 44-வது பாட்டு "தாய் முதலோரோடு சிறு பருவத்திற் றில்லைத் தலத்திடையே திரை தூக்கத் தரிசித்த போது; வேய்வகைமேல் காட்டாதே யென்றனக்கே யெல்லாம் வெளியாகக் காட்டியவென் மெய்யுறவாம் பொருளே" என்பதைக் காண்க.]

சிதம்பரத்திலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்து விட்டனர். பிள்ளைப் பெருமானுக்கு ஐந்து வய

தாயிற்று. திவாகரம், நிகண்டு, சதகம், அந்தாதி முதலிய நூல்களைத் தமது தம்பியாருக்கு நாடோறும் சபாபதி பிள்ளை கற்பித்து வந்தார். ஆனால் பின்னைப் பெருமானோ கல்வியில் கவனம் வைக்கவில்லை. தமது கையில் அகப்பட்ட புத்தகங்களை எடுத்து வாசிப்பதும், கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதுமாகக் காலம் கழித்து வந்தார். எப்படியானாலும் தம்பியை வாசிக்கச்செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு தம் மனைவியை அழைத்து " இனிமேல் இராமலிங்கத்திற்குச் சோறு போட வேண்டாம்" என்று திட்டஞ்செய்தார். இப்படிச் சொல்லியும்' இராமலிங்கம், தமையனார் இல்லாத வேளையில் வந்து சாப்பிட்டுப் போய்க்கொண்டிருந்தார்.

கருணை நிறைந்த இவ்வம்மை எவ்வளவு புத்திமதி சொல்லியும் பிரயோசனமில்லாமற் போயிற்று. ஒருநாள் சபாபதி பிள்ளையின் தாயார் திவசம் வந்தது. விருந்தினர் அநேகர் வந்து சாப்பிட்டனர். ஆனால் இராமலிங்கமோ வரவில்லை. இதுதான் தனது தமையனார் இராத சமயம் என்று இராமலிங்கம் மாலை 3-மணிக்கு வழக்கம் போல் புறக்கடை வழியாக வந்தார். உணவுப் பொருட்கள் பதனழிந்துவிட்டன. இதனை இராமலிங்கம் சாப்பிட நேரிட்டதேயென்று வருத்தப்பட்டுக் கொண்டு அவ்வம்மையார் போசன மளித்தார். வருத்தத்தினால் அவ்வம்மையாருடைய கண்களினின்று நீர் வடிந்ததைப் பார்த்த இராமலிங்கம் "நீர் ஏன் அழுகிறீர்?" என்று அண்ணியாரைக் கேட்டார். " உனக்காகத்தான் வருத்தப்படுகிறேன்; படிக்கச் சொல்லியும் படிக்காதிருந்ததால்தானே இந்தப் பதனழிந்த உணவைத்

திருட்டுத்தனமாய்ச் சாப்பிட நேர்ந்தது" என்றனர். "நாளையமுதல் அப்படியே கல்விகற்கத் தொடங்குவேன். மேல்மாடியில் உள்ள அறையை எனக்குத் தனியே விட்டு விடவேண்டும்; அந்த அறையை மெழுகி வைத்து விடுங்கள்" என்ருர் இராமலிங்கம். அப்படியே அவ்வம்மையார் செய்தனர். ஒரு நிலைக் கண்ணுடியும், சில பரிமளவர்த்திகளும் வேண்டுமென அண்ணியிடம் சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு போய், அவைகளைக் கொண்டுவந்து அறையில் வைத்தார். கதவுகளை மூடி நாடோறும் வாசித்து வந்தார். இன்ன புத்தகத்தைப் படிக்கிருர் என்பது யாருக்கும் தெரியாது.

சபாபதிப் பிள்ளைக்குத் தம்பி நல்லவழிக்கு வந்துவிட்டானென்று சந்தோஷம் உண்டாயிற்று. வாங்கிய கண்ணுடியைச் சுவரில் மாட்டி அதற்குப் புஷ்பம் வைத்து, பழம் படைத்து, திருவிளக்கு ஏற்றிவிட்டு, நெடுநேரம் அக்கண்ணுடியை நோக்கின வண்ணமாய்த் தியானித்து வந்தனர். அப்போது திருத்தணிகை முருகன் திருவுருவம் அக்கண்ணுடியின்கண் தோன்றிற்று. அந்த அருளுருவத்தைக் கண்டார். கண் மழை பொழிந்தது. தம்மையும் மறந்து அத்திருவருள் இன்பத்திலேயே தேக்கினுர். தணிகாசலனுர்திருவருளினுல் கல்வியறிவு உண்டாயிற்று. இதனுல் அவருக்குக் கல்வி கற்பித்தது ஒருவருமில்லையென்று ஏற்படுகிறது. அவரும் பாடிய பாடல்களில் இவ்வுண்மையினைப் புலப்படுத்தியுள்ளார்.

[ 4-வது திருமுறை அன்புமாலை 16-வது பாடல் "சுற்றது நின்னிடத்தே, கேட்டது நின்னிடதே *-

மெய்யின்ப வாழ்க்கை முதற் பொருளே" என்பதை யும், 10-வது. 14-வது பாடல்களையும் பார்க்க.]

**இஃது அவர் கல்விகற்ற விதம்.**

மாலையில் நாள்தோறும் பிள்ளைப் பெருமான் சென்னைக் கந்தசாமி கோவிலுக்குப் போய் அருமை யான பாடல்களைப்பாடி வந்தார்:

1-வது திருமுறை—திருவருண் முறையீடு—49:

"சிறுகால் வீசி ஆடிடச் சென்ற அந்தப் பருவத்திலே நல்லறிவளித்தே யுனைப் பாடச்செய்தாய்"

2-வது திருமுறை—அடிமைப் பதிகம்:

4—"என்னை யறியாப் பருவத்தாண்டு கொண்டவென் குருவே"

9—"சிறுபருவத்தென்னை யாண்டு நிழற் கருணையளித் தாய்"

6-வது திருமுறை—பிரியே னென்றல்;

—"தெருவிடத்தே விளையாடித் திரிந்த வெனை வலிந்தே சிவமாலை யணிந்தனை"

இங்ஙனம் ஒன்பதாம் வயதிலேயே தோத்திரப்பாக் கள் மிகவிரைவாகப் பாடிக்கொண்டு வந்தார்.

2-வது திருமுறை—அடிமைப் பதிகம்:

3—"ஆண்டாறு மூன்றுண்டில் ஆண்டுகொண்ட அருட்கடலே"

6-வது திருமுறை—வாதனைக் கழிவு :

7—"ஆறொரு மூன்று ஆண்டாவதிலே முன் என்னை ஆண்டாய்"

தம் தம்பி வீடு தங்கி இருப்பது சபாபதிப் பிள்ளைக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. உள்ளபடி தம்பியின் அருள் திறத்தை அறிந்தாரில்லை.

ஒரு நாள் சபாபதிப் பிள்ளைக்குக் கையேடு படிக்கும் பெண்மணிக்குத் தேக அசௌக்கியமுண்டானதால் அவ்வம்மை வரவில்லை.

அவ்வம்மை உதவியில்லாமல் புராணஞ் சொல்லுதல் முடியாது. வேறே யாரும் வாசிக்கிறவர்கள் அகப்படவில்லை. சபாபதிப்பிள்ளை மனைவியார் இராமலிங்கத்தை வாசிக்கும்படி தூண்ட அவரும் யோசனை செய்யாது ஒப்புக்கொண்டார். அன்றிரவு இராமலிங்கம் புராணம் வாசிக்கத் தொடங்கினபோது அவருடைய குரலின் சுவையும், சொல்லும் வகையும், வந்திருந்தவர்களை மகிழச் செய்தன. சபாபதிப் பிள்ளை வீட்டிற்குத் திரும்பிப் போனபோது இதனைத் தம் மனைவிக்குச் சொல்லிச் சந்தோஷப் பட்டார்.

ஒரு நாள் சபாபதிப் பிள்ளை திடீரெனக் கடுங் காய்ச்சலால் வருந்தினர். அன்று முத்தியாலுபேட்டையில் ஒரு வணிகர் வீட்டில் பிரசங்கம். தான் எழுந்திருக்க முடியாமல் இருந்ததால் தன் தம்பியை அனுப்பிச் சங்கதியைச் செட்டியாருக்கு அறிவித்து வரும்படி சொன்னர். இராமலிங்கம் போனபோது ஜனங்கள் கூடி, புராணிகர் வரவை எதிர்பார்த்

திருந்தார்கள். இராமலிங்கம் போகவே அவரைப் பிரசங்கம் செய்யவேண்டுமென்று தொந்தரவுசெய்தனர். அவர் தமக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லியும் அவர்கள் விடாததால் ஒருவாறு ஒப்புக்கொண்டு பிரசங்கம் செய்தார். இவரது சொற்பொழிவைக் கேட்ட ஜனங்கள் இவர் சாதாரண மனிதரல்லர் என்று அச்சங்கொண்டனர். இதனைக் கேட்டு ஆனந்தித்த செட்டியார் இராமலிங்கத்தையே பிரசங்கம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்; அதன்படி நடந்து வந்தது. சபாபதிப் பிள்ளைக்குத் தன் தம்பியின் பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்ற எண்ணமுண்டானதால் ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் ஒரு புறத்தில் ஒதுங்கியிருந்து கேட்டார். இராமலிங்கத்திற்குக் கையேடு கிடையாது. தம்பி சொன்மாரி பொழிந்ததைக் கேட்ட சபாபதிப்பிள்ளைக்கு அச்சம் உண்டாயிற்று. வீட்டிற்குச் சென்று நிகழ்ந்ததைச் சொல்லி "இதுவரையில் தம்பியென்றிருந்தேன்; அவர் தம்பியல்ல, முருகபிரானே" என்றனர். இதன் பிறகு தமையனார் மனைவி செய்யும் பக்தியைக் கண்டு பிள்ளைப் பெருமான் தாங்கப் பொருதவராய்க் குடும்பத்தில் கலப்பதை விட்டனர்.

உலக வாழ்க்கை மாயா சம்பந்தமென்றும், நிலையில்லா வாழ்வென்றும் நன்கு ஓர்ந்து, தன்னையறிந்து தலைவனைக் காணவேண்டுமென்னும் ஆவல் மேலிட்டது. இறைவன் திருவருள் முன்னின்றிழுத்தது. இது முதல் சென்னைக் கடுத்த திருவொற்றியூருக்கேகி தியாகப் பெருமானைத் தினந்தோறும் தொழுவாராயினர். மூலஸ்தானத்தை வலம் வரும்போது பிர

காரத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமியை நெடுநேரம் நின்று தியானிப்பது வழக்கம். இவர்தாம் பிள்ளைப் பெருமானுக்கு வழிபடு கடவுள். குருவடிவாக அமர்ந்திருக்கும் சுப்பிரமணிய சுவாமியைப் பிள்ளையவர்கள் வணங்கித் தாயைக்கண்ட சேய்போல் ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று—

"ஏழாவது வயது வரையில் தாய் முலைப் பாலை மிகக் குடித்து நாக்குத் தடிப்பேறிற்று; ஆதலினால் படிப்பேறிற்றில்லை. அடியேன் தனக்குக் கல்விப் பிடிப்பேறிச் சிறியேன் முன் பிறந்தவர் தம் பெயரெழுதப் பெரிதும் சுற்று நடிப்பேறினர். அவர்முன் நொடிப்பேறினேன் இந்நாயினேன். தந்தை தாய்க்கு அடியேன் கடைப்பிள்ளை, கல்வியிலும் கடைப்பிள்ளையானேன். பண்டமெல்லாம் கொள்ளக் கடைப்பிள்ளை யானேன், கல்வியறிவில்லாக் குறையொன்றே அடைந்திட்டேன்; அவ்வருஞ் செல்வத்து ஆசையுளேன். பேடி மணம் நாடி மனம் வருந்தல் போன்றது" என்று விண்ணப் பித்தனர்.

இரண்டாவது திரு முறை—போற்றிப் பதிகம்
—1, 2, 3, 10

ஆருவது திரு முறை—குருதரிசனப் படலம்
—35, 36. 37, 38, 43.

" தனிப்பாடல்—25
" அநுபவமாலை—100

இவ்வாறாகத் தமது குறையை விண்ணப்பித்து ஆனந்தக்கண்ணீர் சொரிய நின்றனர். அழுகின்ற பிள்ளையைக் காணும் தாய் தாழாது வேண்டிய வற்றை அளிப்பதுபோல், எதிரில் நின்ற பிள்ளையவர்களின் தலையின்பேரில் தமது கரத்தை வைத்துச் சிவபெருமான் ஞான தீக்ஷை செய்து, பாசக்கடல் கடப்பித்து, சிவஞானம் போதித்து—

> "அஞ்சேல், அடியார்களிடமிருந்து நமக்கு வேண்டுவது பாமாலை. நீ பாடி, அப்பாமாலையை எனக்குச் சாத்துக"

என்றனர்.

2-வது திருமுறை—477-ம் பக்கம்:

46. "இருளற வோங்கும் பொதுவிலே நடஞ்
செய் யெங்குருநாதன் எம்பெருமான்;
அருளென்னும் வடிவங்காட்டி யொண்
முகத்தே யழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற வருமைத் திருக்கையாற்றடவி
......புதுமை யீதந்தோ!"

49. "துரும்பினும் பற்றாத வென்னைப் பணி
கொண்டெல்லாம் ஓதாதுணரவுணர்த்தி
யுள்ளேநின் றுளவுசொன்ன நீதா"—

இது முதல் பிள்ளையவர்கள் அருட்பாப் பாடத் தொடங்கினர். பிள்ளையவர்கள் பாடவும் இறைவன் அவைகளைத் திருத்தவுமாகப் பாடிக்கொண்டு வந்தனர்.

6-வது திருமுறை—அநுபவமாலை—
77-வது பாட்டில்:
"யான் பாட, நீ திருத்த"

என்பதைக் காண்க.

இது நிற்க, பிள்ளையவர்கள் திருத்தணிகைக்குச் சென்று பெருமானைத் தரிசிக்கும் பேறு பெற்றேனில்லையே என்று பாடிவருந்தினர்.

5-வது திருமுறை—"திருத்தணிகைப் பதிகம்"-என்ற தலைப்பின் கீழுள்ள பாக்களைப் பார்க்கவும்.

இப்பாடல்களில் முக்கியமாய் கவனிக்கத்தக்கன.

திருத்தணிகைப் பதிகம்—ஆற்ரு முறை:

8-வது பாட்டு—"நீயு நானு'மாய், பாலு நீருமாய் நிற்க வேண்டினேன்".

10 ,, "பாலில் நீரென நின்னடிக்கணேபற்றி வாழ்ந்திடப் பண்ணுவாய்கொலோ".

## இரந்த விண்ணப்பம்

7-வது பாட்டு—'யானு நீயுமாய் கலந்துறவாடு நாள் எந்த நாளறியேன்"

கருணைமாலை

12 „ "ஆறு மாமுகத் தழலகை மொண்டு
கொண் டூறில்கண்களா லுன்ன
வெண்ணினேன்''

இங்ஙனம் இராமலிங்கம் ஆலய வழி பாட்டி லேயே இருந்து காலம் கழித்துவந்தார். விவாகத்திற் கேற்றபருவமடைந்ததைத் தம்முடைய தமயனார், தமக்கை முதலியவர்களறிந்து அவருக்கு விவாகம் செய்யக் கருதிப் பிள்ளையவர்களை வேண்ட, அவர் சம்மதியாமலிருந்தார் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் விவாகம்செய்துகொண்டதை எடுத்துக் காட்டி, அவருடைய தமக்கையார் புத்திரியை விவாகம் செய் வித்தனர். ஆயினுமவர் அந்நெறி நிற்கவில்லை. இச் சமயத்தில் தம்முடைய தாயார் சிவ பதமடைந்தனர். தமது தமயனார் பரசுராமப்பிள்ளை தேக மெலிவுற்றுப் பிணியால் வருந்துவதை அறிந்த பிள்ளையவர்கள் அவரைச் சிதம்பரத்திற்கு அழைத்துக் கொண்டு போய் நடராஜபதியைத் தரிசிக்கச் செய்தனர். இந்த க்ஷேத்திரத்தை விட்டு ஸ்தலயாத்திரையாகச் சீகாழி, திருவாரூர், திருச் செங்காட்டங்குடி, திருப்புகலூர் முதலிய இடங்களுக்குச் சென்று தரிசனம் செய்து பல பாக்களைப் பாடி மறுபடியும் சிதம்பரம் வந்து நடராஜநடனதரிசனம் செய்து தமதுபிறப்பிடமாகிய மருதூரையடுத்தகருங்குழிக்குவந்தார். அங்குத் தமது தமயனார் பரசுராமப்பிள்ளை சிவபதமடைந்தனர். பிள்ளையவர்கள் இவ்விடத்திலேயேதங்கி, ஞானயோக சமாதிவழி நின்றார். இப்படியிருக்க, சென்னைக்கடுத்த

திருமயிலையில் தம்மை வளர்த்த தமயனார் சபாபதிப் பிள்ளை சிவபதமடைந்தனர். இதனைத் தாமே உணர்ந்தும் அவ்விஷயத்தில் நுழையாது பிள்ளையவர்கள் சிவானுபூதியிலேயே இருந்தனர்.

பிள்ளையவர்கட்குப் பிரபவஸு வைகாசி-மீ 11-உக்கு வயது 45 ஆயிற்று. வடலூர் என்னும் பார்வதி புரத்தில் சத்திய தருமச் சாலை யென்னும் பெயரிட்டு ஓரிடம் வகுத்து அதில் தங்கி, ஜீவகாருணியத்தை விளக்கி, கொல்லா விரதத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று உபந்நியாசம் செய்து வந்தனர். இச்சாலை சாதிபேதமின்றி எம்மதத்தினரும் ஒருங்கிருந்து போஜனம் செய்யும் பெருமையோடு அமைக்கப்பட்டது.

"கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என்னிச்சைபராபரமே"

என்னும் தாயுமானவர் திருவாக்கை நிலை நிறுத்தும் எண்ணம் உடையவராய், புலாலுண்ணல் தகாத காரியம் என்பதையும் அதனால் விளையும் தீமைகள் இன்னவை யென்பதையும் போதித்து வந்தனர்.

முதல் திருமுறை—நெஞ்சறிவுறுத்தல்—650 :

"கோடாது கொல்லா விரதமது கொள்ளாரைக்
காணில் ஒருபுல்லாக வெண்ணிப் புறம்பொழிக"

என்பதைக் காண்க.

பிரமோதூத வருஷத்தில் கருங்குழிக் கருகில் மேட்டுக் குப்பம் என்னும் சிற்றூரில் சித்தி வளாகத் திரு மாளிகையில் நிஷ்டையிலிருக்கையில் சிவஞான முதிர்ச்சியால் தோன்றிய ஜோதியைத் தரிசித்து, அருட்பெருஞ்சோதி வடிவத்தைத் தரிசித்து, அருட் பெருஞ்சோதியெனும் அகவல் ஒன்றை வரைந்து வைத் தனர். மேட்டுக்குப்பத்தை விட்டு நீங்காது நிஷ்டை யில் இருந்தனர்.

எச்சமயத்தாரும் வந்து தரிசிக்க ஞானசபை ஒன்று கட்ட வேண்டுமென்று தோன்றிய இறை வன் உத்தரவை மேற்கொண்டு ஒரு சபை கட்ட எண்ணங் கொண்டனர்.

வடலூர் என்னும் பார்வதி புரத்தில் நாற்பது காணியுள்ள இடத்திற்கு உத்தர ஞான சிதம்பரமெனப் பெயரிட்டு, பிரஜோற்பத்தி-வு ஆனி மாதம் தொடங்கி, தை மாதத்திற்குள் சபை ஒன்று கட்டச் செய்தனர். அஷ்டகோணமாகத் தாமரை மலர் போன்றதாயும் அச்சபையைக் கட்ட சுவாமிகள் தமது திருக்கரத்தினாலேயே நிருமாணப்படம் எழுதித்தந்தனர். தில்லைக்கோபுரங்கள் தெரியும்படியான இடத்தில் ஞானசபை கட்டப்பட்டது. சபையிலிருந்து தென்கிழக்கே பார்த்தால் கோபுரங்கள் காணப்படு கின்றன.

6-வது திருமுறை நெஞ்சொடு கூறல்—7வது பாட்டு: நம்பார்வதி பாகன் ... பாட்டின் பரிசு

இந்தச் சத்திய ஞான சபையானது சைவர்களால் பொன்னம்பலமாகவும், வைணவர்களால் பொன்னரங்கமாகவும், புத்தர்களால் பொற்பீடிகையாகவும், மகம்மதியர்களால் தங்கள் மசூதியாகவும், கிறிஸ்தவர்களால் தங்கள் தொழுமிடமாகவும், போற்றப்படுகின்றது. ஞானசபைக்குக் கற்பூர ஆராதனைமாத்திரம் செய்யும்படி கட்டளையிட்டனர் அவ்வாராதனையையும் 12-வயதுக்குட்பட்ட சிறுவனாவது 72-வயதுக்கு மேற்பட்ட பெரியவராவது செய்தல் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

இச்சபையில் அமைப்பதற்குச் சென்னையிலிருந்து ஐந்தடி உயரமுள்ள சீமைக்கண்ணாடி வரவழைக்கப்பட்டது. அக்கண்ணாடியை வள்ளலார் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் ஒரு மண்டலம் பூஜையில் வைத்து பிறகு, அதையும் திருவிளக்கையும் ஞான சபையில் பிரதிஷ்டை செய்வித்தார். இக்கண்ணாடியின் எதிரில் ஜோதியாகிய திருவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. முதலில் ஜோதியைப் பார்த்தல் முடியாது. ஏனெனில், இதற்குத் தடையாய் ஏழுதிரைகள் அமைந்துள்ளன.

## எழுதிரைகளின் பெயர்

(1) கருப்புத்திரை
(2) நீலத்திரை
(3) பச்சைத்திரை
(4) சிவப்புத்திரை
(5) பொன்மைத்திரை
(6) வெண்மைத்திரை
(7) கலப்புத்திரை

என்பன.

## ஏழுதிரைகளின் விவரம்.

1. கருப்புத்திரை — மாமாயை — அரைசது மறைக்கும்.

2. நீலத்திரை - மாயாசக்தி - ஆருயிர் மறைக்கும்.

3. பச்சைத்திரை - கிரியாசக்தி - பரம வெளியதனை மறைக்கும்.

4. சிகப்புத்திரை - பராசக்தி

5. பொன்மைத்திரை - இச்சாசக்தி - பொருளுறு வெளியை மறைக்கும்.

6. வெண்மைத்திரை - ஞானசக்தி - மெய்ப்பதி வெளியை மறைக்கும்.

7. கலப்புத்திரை - ஆதிசக்தி - கருதனுபவங்களை மறைக்கும்.

இவ்வேழு திரைகளையும் நீக்கினல் ஜோதி தரிசனம் கிடைக்கும்.

6-வது திருமறை - அருட்பெருஞ்சோதி அகவல் -817 வரி (திரை விலக்கத்தைப்பற்றி—அருட்பெருஞ்சோதி அகவல் வரிகள் 813 முதல் 826 வரை பார்க்கவும்).

தனிப் பாடல் 449-ம் பக்கம். (1) மெய்யருள் வியப்பு - 42 - "ஏழுநிலைகள் ஓங்குந்தெய்வ மாடமொன்றிலே."

தனிப் பாடல் (2) நெஞ்சோடு கிளத்தல் 470 பக்கம்:ஏழ்நிலைக்குள்ளிந்த ஈசுவரனை அடையா வண்ணம்

இந்த மாயாசக்திகளாகிய ஏழுதிரைகளும் மறைக்கின்றன வென்றும், இம் மாயா சக்திகள் நம்மை விட்டு நீங்குமானல் நமது ஆன்மாவின் ஒளி அதிகமாகும் என்றும், ஒளி அதிகரிக்கிறபோது நாம் ஈசுவரனை அடைகிறோம் என்றும் நமக்கு காட்டியிருக்கிறார்.

6-வது திரு முறை - அருட்பெருஞ்சோதி அகவல் 48-வது பக்கம்:

"திரையெலாந் தவிர்த்துச் செவ்வியுற்றுங்கே,

வரையெலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே"

நெஞ்சொடு கிளத்தல் :—"ஏழ் நிலைக்குள் ளிருந்த அதிசயம்."

சிவயோக நிலை :— "ஏழ் நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்".

ஞான சபை கட்டடவேலை ஆரம்பிக்கும் முன்னேயே மேட்டுக் குப்பத்திற்குச் சென்று நிஷ்டையில் இருந்தனர். சத்திய ஞான சபையில் தெய்வ வழிபாடும், தருமச்சாலையில் சீவகாருணிய விளக்கவழிபாடும்,15-வயதுக்கு மேற்பட்டவர்கள் நல்லொழுக்கந் தவறாது சமரச வேத பாடசாலையில் வித்தியாப்பியாசஞ் செய்து வருதலும், நடராஜ மணி சிவ காமவல்லி அம்மையாருடன் வீற்றிருக்கும் அற்புத ஆனந்தத் திருக்கோயிலின் முன்புறத்தில் சாஸ்திர விசாரணையும், குருவாரந்தோறும் திருஞான சம்பந்த சற்குருவைப் பூசித்து வரும் குறிப்பையுங் காட்டி எழுந்தருளி யிருப்பவராயினர். சத்திய தரு

மச் சாலையிலும், மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தி லும் கற்பூர ஆராதனை ஒன்றையே செய்யும்படி வற் புறுத்தித் தாமும் செய்து காட்டினார்கள்.

மேட்டுக் குப்பத்தில் ஞான சமாதி கூடியிருந்து கலியாப்தம் 4978-ல் ஸ்ரீமுக ௵ தை மீ 11௨ சுக் கிரவாரம் புனர்பூச நக்ஷத்திரம் கூடிய பூர்வ ராத் திரியில் சின்மாத்திர சகஜ சமாதியில் அசைவற நின்று, சற்குருவைச் சிந்தித்துத் தாம் அமர்ந்திருந்த அறையை மூடிப் பூட்டுவித்து, மௌன நிஷ்டை கூடி நித்தியானந்த முற்றனர். பின்னர் அவ்வறையி னின்றும் வெளிவந்தாரில்லை.

இதுவரையில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளு டைய சரித்திரத்தை வாசித்தோம். இதற்கு மேல், அவர்களுடைய ஒழுக்கம் சிறுவயது முதல் எப்படி இருந்ததென்றும், நமக்குப் பயன்படும்படி அவர் எழுதி வைத்துள்ள நூல்கள் இன்னவை யென்றும், சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தியது என்னை என் றும், அப்படி நடந்தமையால், அவர்கள் பெற்ற பேறு இன்ன தென்றும், அப்பேறு பெறுவதற்கு அவர்கள் இம்மையில் எவ்வித முயற்சி செய்தார்கள் என்பதையும் கீழே எழுதியுள்ளோம்.

---

சுவாமிகளால் "ஷடாந்த சமரச சன்மார்க்க சங்கம்" என்பது நிறுவப்பட்டது. இச்சங்கமாவது என்ன என்பதையும், அதன் நோக்கங்கள் இன்னவை என்பதையும் பின்னால் எழுதியுள்ளோம்.

## பிள்ளையவர்களின் ஒழுக்கம்

பிள்ளையவர்கள் முழங்காலுக்குமேல் வெள்ளை வஸ்திரந் தரித்துத் தம்முடைய தேகம் பிறருக்குத் தெரியாதபடி மூடிக்கொண்டு, முக்காடிட்டு மறைத்த மேனியுடையவராய், வீதிகளில் தலை குனிந்து கை கட்டிக் கொண்டு ஓரமாய்ச் செல்வர். திண்ணையிலாவது, உயர்ந்த ஆசனத்திலாவது, காலின்மேல் காலைப் போட்டாவது, காலை நீட்டியாவது உட்காருவதில்லை. (பிள்ளைப்பெரு விண்ணப்பம் 63). வீண் வழக்கு ஒரு வருடனும் பேசுவதில்லை. உயிர் இரக்கம் அதிகம் கொண்டொழுகினவர். உலகவாழ்வைப் பார்த்திடில், கேட்கில் சஞ்சல முறும் என்று தோட்டம் தோப்பு கொல்லைப்புறம் முதலிய சஞ்சலத்திற் கேதுவில்லாத இடங்களிலே பகலும் இரவும் திரிந்து கழித்தனர். (பிள்ளைப்பெரு விண்ணப்பம் 44, 54,) சில மங்கையர் வலிந்தணைய அழைத்த காலத்தில் பயந்திருந்தது மன்றி அவர்களைக் கடிந்து பேசுவதுமில்லை. பிறகு அந்தத் தெருவழியாகப் போகாமல் வேறு வழியாய்ச் செல்வர். (பிள்ளைப்பெரு விண்ணப்பம் 24. 45, விருந்துக்கு அழைத்தால் போவதில்லை (பிள்ளைபெரு விண்ணப்பம் 25). அவருடன் வாது செய்ய வந்தவர்களைப் பார்த்த காலத்தில் வீணே காலம் கழியுமென்று அஞ்சினர். (பிள்ளைப்பெரு விண்ணப்பம் 38). தூக்கத்திற்கு அஞ்சி இரவில் படுக்காது திரிந்தனர். "தூங்காது விழிக்க வைத்த துரையே" என்று பாடியுள்ளதைப் பார்க்குங்கால் இவர் தூங்குகிறதில்லை என்பது தெரிகிறது - (6-வது திருமுறை - திருநடப் புகழ்ச்சி — 10.)

நல்ல உணவை உண்ண, அந்த உணவினால் என்ன துன்பம் நேருமோவென்று வெறும்வயிறோடு இருப்பர். (பிள்ளைப்பெரு விண்ணப்பம் 26.) அன்புளார் தமக்கு வலிந்து ஈந்த பொருளினை வாங்கிப் போன போதெல்லாம் அப்பொருளால் மனம் இருளூறும் என்று மனம் புழுங்கி அப்பொருளைச் சாலகத் தெறிவது வழக்கம். (பிள்ளைச் சிறு விண்ணப்பம் 10) அவருக்கு நண்பர்கள் பொற்சரிகை, துகில் உடுத்திய போது பயந்தார் வெய்யிலுக்குக் குடைபிடிக்கவும் உள்ளம் வெருவினர் - கை வீசி நடப்பதற்கு அஞ்சினர். செல்வச் செருக்கு, உத்தியோகப் பொய்மைக் கிறுக்கு உடைய ஈனர் விட்டு வாயிலில் போய் நிற்பதை வெறுத்தனர்.

சுவாமிகள் இரவும் பகலும் தைலதாரைபோல் ஞான நிஷ்டையில் இருந்தவர் - அவர் கண்களில் மணலூற்றுப்போல் சதா ஆனந்த பாஷ்பம் பெருகும். இனிய தேனினும் பாலினு முயர்ந்த சுவையினையுடைய கவிகளால் சிவ பெருமானையே புகழ்ந்து துதித்தவர். மெல்லெனப் பேசுபவர். சீவகாருணியத்தில் மிகுந்தவர். விரக்தியுடைய பெரியவர்களால் சிவஞானியென மதிக்கப் பெற்றவர்.

வள்ளலார் நடக்கிற காலங்களில் அடிச்சுவடுகள் தோன்ரு. நடக்கும்போது குறுக்கேயுள்ள சப்பாத்தி முள்ளின் மீது சாதாரணமாய் நடந்து செல்வர். நடக்கும்போது நிழல் தெரியாது.

## பிள்ளையவர்களால் செய்யப்பட்ட நூல்கள்

1. திருவருட்பா - இது ஆறு திருமுறைகளடங்கியது. "முறை" என்ற பதத்திற்கு "புத்தகம்", என்று பொருள்.

2. ஜீவகாருணிய ஒழுக்கம் } இலக்கிய நூல்கள்.
3. மனுமுறை கண்டவாசகம் }

நால்வர்கள் பாடிய தேவார திருவாசகங்களைச் சைவர்களும், ஆழ்வார்கள் எழுதி வைத்த பிரபந்தங்களை வைணவர்களும், மகம்மத் எழுதி வைத்த கொரானை மகம்மதியர்களும், கிறிஸ்துவின் சீடர்களால் எழுதப்பட்ட பைபிலைக் கிறிஸ்துவர்களும், இப்படி அந்தந்தச் சமயாசாரியர்கள் செய்த நூல்களை அந்தந்தச் சமயத்தாரும் போற்றுகின்றனரேயொழிய, எதுவும் பொதுவான நூலாகக் காணப்படவில்லை.

தேவார திருவாசம், நாலாயிரப்பிரபந்த முதலிய புத்தகங்களிலிருந்து மேற்கோளாகப் பிள்ளைப் பெருமான் தமது அருட்பாவில் வைத்தும் பாடியுள்ளார். இப்பாடல்களும் பிள்ளைப்பெருமான் கொள்கைகளும் எச்சமயத்தாரும் ஒத்துக்கொள்ளத் தக்கனவாயிருக்கின்றன. வேதாந்த சிந்தாதிகளுக்கு விரோதமான விஷயங்கள் ஒன்றும் காணப்படா.

திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானைப் பிதா என்றும், மாதா என்றும், குருவென்றும், மாமனென்றும், மாமியென்றும், புத்திரரென்றும், சாதி

என்றும், இனத்தினர் என்றும், வாழுமூரென்றும், உண்ணும் பொருள்கள் என்றும், கொடுக்கும் பொருள்கள் என்றும், சகோதரன் என்றும், மனச் செயல்களை மாற்றுபவ னென்றும் பாடியிருப்பது போலநமது இராமலிங்க சுவாமிகளும் பாடியுள்ளார்.

அருட்பாவானது சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகும் உடையது. வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்ட முதனூலான வேத சிவாகமங்களின் எல்லைக் குட்பட்டது. பக்தியும், யோகமும், ஞானமும் விரவிக்கிடப்பது. எல்லாராலும் எளிதில் அறியத்தக்க உலக வழக்கச் சொற்களையே பெரும் பாலும் உடையது. எத்தகைய புற மதத்தினரும் இனிய தென்பது. சைவ சமயிகள் உள்ளத்தினை யழற்படு வெண்ணெய்ப் பாவையொப்ப அம்பலவாணன் றிறத்து இளகி நிற்கச் செய்வது. இது மதுரக்கவியான் மலிந்த பாடற்றிரம். இத்தன்மையான நூல் இக்காலத்தில் வேறு இருக்கின்றதா?

திருவருட்பாவில் "அருள்" என்ற பதம் 3738 முறை வந்துள்ளது.

கையால் எழுதப்படும் படங்களும், புகைப்படங்களும் உருவத்தை யுணர்த்தும். உள்ளத்தை யுணர்த்தமாட்டா. நூல்கள் உள்ளத்தை யுணர்த்தும். படங்கள் ஒருவரது உள்ள நிலையை அவர் எழுதிய நூல்கள் உணர்த்தும். அதைப்போல, சுவாமிகள் எழுதிய திருவருட்பா அவர்களின் தூய உள்ளத்தைக் காட்டுகிறது.

## I. சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தியது என்னே ?

அருட்பா முழுவதிலும் சுவாமிகளின் அறிவுறுத்தலைக் காணலாம். அதனை ஆருவது திருமுறை அருட்பெருஞ்சோதி அகவலில் காணலாம். மேலே எழுதப்பட்டுள்ள "ஷடாந்தசமரச சன்மார்க்க சங்கம்" என்பதனுலும் நன்ருய் அறியலாம்.

## II. அவர்கள் கோலிய முறை

### 1. கடவுளிடத்துறுதி :

அருட்பா முழுவதும் அவர் கொண்ட உறுதியைக் காணலாம்,

### 2. இயற்கை வாழ்வு :

அதாவது பொருந்திய உணவு முதலியன. 'உணவுக்கேற்ற குணம்' என்பது பழமொழி. உணவு என்ருல் சைவஉணவு என்று கொள்ளல் வேண்டும்! உயிர்க் கொலை கூடாது. ஜீவகாருணிய வொழுக்கத்தைப் பார்க்க.

### 3. முறையீடு :

முறையீடு என்ருல் முறையிடுவதென்று பொருள். இறைவனிடத்தில் தம் குறைகளை முறையிட்டனர். சுவாமிகள் அழுத அழுகைக்கு அளவேயில்லை. அருட்பாவில் எந்த இடத்தில் பார்த்தாலும் முறையிட்டு அழுவதையே பார்க்கலாம்.

### 4. அருளொழுக்கம் :

மேற்கண்டபடி முறை யிட்டு அழுததால் தன்மை ஒருமை யென்பது நீங்கியது. அருளையே

நினைந்து நினைந்தழுதார் - அருண்மயமாய் அருள் நெறி நின்று அருளறத்தையே ஓம்பினார். சுவாமிகள் எழுதிய ஜீவகாருண்ணிய விளக்கமே அவர்களது அருளின் தன்மையை நன்றாகக் காட்டுகிறது. சுவாமிகளின் இரக்க நிலையை அளந்து சொல்ல முடியாது. அவரது இரக்கத்துக்கு எல்லை யில்லை. இரக்கமே அவர் உயிர். இரக்கமே அவர் உடல். இரக்கமே அவர். (பிள்ளைப் பெரு விண்ணப்பம் - 93 - 94.) "இரக்கம் என்னுயிர் வேறில்லை, இரக்கம் நீங்கில் என் உயிர் நீங்கும்" சுவாமிகளின் இரக்க நிலையை அருட்பாவில் பிள்ளைப்பெரு விண்ணப்பத்தில் காணலாம்.

## III. சுவாமிகள் பெற்ற பேறு.

### 1. உறுதி நிலை:

இந்நிலையை யடையாத வண்ணம் பல இடையூறுகள் நேரும். அப்படி நேர்ந்த போதும், ஒரே உறுதியாய் இறைவனடியைப் பற்றிக் கொண்டார்.

### 2. திருவருள் நிலை:

சுவாமிகள் இறைவன் பிள்ளையான பிறகு மனம், அகங்காரம் முதலியவைகளின் ஆற்றல் அடங்கி ஒடுங்கிற்று. அதிகாரத்தோடு அவற்றைத் தலைகாட்டாதே யென்று கட்டளையிட்டதை "தத்துவவெற்றி" என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ளேன். சுவாமிகளுக்கு அமுது கிடைத்த பாக்களையும் இதனடியில் குறிப்பிட்டுள்ளேன்.

### 3. சாகா நிலை:

மீண்டும் பிறவாத ஒரு நிலை. இனிப் பிறந்து, இறத்தலில்லையானால் பிறத்தலில்லை. இறைவனை

நினைந்து நினைந்து, கசிந்து கசிந்து, உருகி உருகி, இறைவன் நெஞ்சினை பெற்றார். அப்பேற்றால் ஆனந்தத்தில் தோய்ந்தார், ஆனந்த மயமாய் நின்றார். ஆனந்த வடிவினரானார்.

ஆனந்தவடிவம் பெற்றதால் சாகாநிலை பெற்றார். இதனைப் பின்வரும் செய்யுள்களால் காண்க.

(1) "என்னையும்......இறவாவரமளித்து"

(2) "இறவா வரமளித் தென்னை மேலேற்றிய."

## IV. இளமை முயற்சி

இளமையில் சுவாமிகள் ஒரு குருவை, ஒரு நூலை, ஒரு வழிபடு கடவுளைக் கொண்டார்கள்.

1. குரு யார்? - ஞானசம்பந்தர்.
2. நூல் - திருவாசகம்.
3. வழிபடு கடவுள் - தணிகை முருகப்பெருமான்

### ஷடாந்த சமரச சன்மார்க்க சங்கம்

இச்சங்கம் சுவாமிகளால் நிறுவப்பட்டது. இதன் பொருள் சுருக்கமாக அடியில் காணலாம். சங்கம் ஒன்று ஏற்படுத்தினால், தலைவர் அமைச்சர் நிருவாக அங்கத்தினர், சந்தாச் செலுத்துவோர் முதலியவர்கள் வேண்டுமே. இச்சங்கத்திற்கு உறுப்பினர்கள் யார் என்று விசாரிப்போம்.

தலைவர் :—எல்லாம் வல்ல இறைவன்.

"அமரரு முனிவரு மதிசயித்திடவே...
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே."

அமைச்சர் :— இயற்கை அன்னையார்.

நிருவாக அங்கத்தினர்:— மெய்யறிவு பெற்று அருள் நெறியோம்பிய அடியவர்கள்.

(1) "தாயையுடையா ரெல்லாம் சமரசசன் மார்க்கம் சார்ந்தவரே..."

(2) "அருளுடையா ரெல்லோரும் சமரச சன் மார்க்கம் அடைந்தவரே..."

ஷடாந்தம் என்பது ஆறு அந்தங்கள்:

1. காலாந்தம் 4. நாதாந்தம்

2. யோகாந்தம் 5. வேதாந்தம்

3. போதாந்தம் 6. சித்தாந்தம்

சமரசம் :— சுவாமிகள் "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டு" மென்றூர். இப்பேய் கடவுள் அன்பைக் கெடுக்கிறது. ஒரு சமயத்தில் பற்றுவைத்தவன் மற்றைச்சமயத்தாரை இகழ்ந்து பேசுவது வழக்கமாக இருக்கிறது. சாதியில் உயர்வு தாழ்வு என்று சொல்லிக் கொள்ளுகிறூர்கள். சுவாமிகள் சாதிமத வேற்றுமைகளை மறுத்துச் சமரசம் அறிவுறுத்தியிருக்கிறூர். இதற்கு வடலூரில் கட்டப்பட்ட சபையே சாட்சி.

சன்மார்க்கம் :— இது தான் சமரசத்துக்குரிய மார்க்கம். இயற்கை வாழ்வே சன்மார்க்கம். சன்மார்க்கத்தை யடைய முதல் முதல் வேண்டுவது

அருளறம்; அதாவது பிறவுயிரைத் தம்மைப் போல் கருதுவது. இது பற்றி "ஜீவகாருணிய ஒழுக்கம்" என்னும் நூலில் விரிவாக எழுதி உலகிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

**சங்கம்:**— அருள், தயை, இரக்கம், கருணையுடையார் அனைவரும் ஷடாந்த சமர சன்மார்க்கத்தார். இவர்கள் சன்மார்க்க சங்கத்தைச்சேர்ந்தவர்கள்.

சங்கத்தின் உதவியால் பல நலன்களை யடையலாம்.

ஆகவே, சமரச சன்மார்க்க சங்கத்திற்குத் தலைவர் எல்லாம் வல்ல இறைவனென்றும், தயையென்னும் அருளுடையார் அனைவரும் சமரச சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்த அகவினத்தாரென்றும்,ஏனையோர் புறவினத்தா ரென்றும், அகவினத்தார் புறவினத்தாரையும் தம் வழிப்படுத்தச் சன்மார்க்கத் தொண்டாற்றல் வேண்டுமென்றும், இத்தொண்டே இறை பணியென்றும் உலகிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

"உயிர்க் கொலையும் புலைப் புசிப்பு முடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லரவர் புறவினத் தார்"

**இரக்கமே சுவாமிகளின் உயிர், உடல்: இரக்கமே அவர்.**

பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் பன்னிரண்டு வயது முதல் நடந்ததை விவரித்திருக்கிறார். அன்பர்கள் இதனை வாசிக்கும்போது இரக்கமே சுவாமிகளின் உயிர், இரக்கமே சுவாமிகளின் உடல், இரக்கமே அவர் என்பதை அறிவார்கள்.

## இறைவனிடம் முறையிடுவது
[எண்—பாட்டெண்]

5. என்னை யடுத்தவர், நேயர், சூழ்ந்தவர், உறவினர், தாயர், உடன் பிறந்தோர், அயலவர் எனும் இக்குறிப்பினர் முகங்களில் இளைப்பைக் கண்டபோதெல்லாம் மயங்கி என்னுள்ளம் கலங்கியது.

6. எல்லா ஜனங்களும் பசியினால், பிணியால் மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப் பார்த்தபோதெல்லாம் பயந்து என்னுள்ளம் பதைத்தது.

7. வறுமை என்னும் சங்கடப் பாவியால் வருந்திப் பிறர் என்னை ஒரு நண்பனாகக் கொண்டு என்னுடன் குறைகளை உரைத்த போது நடுங்கி என்னுள்ளம் உடைந்தது.

8. பிணியினால் ஆவி தளர்கின்றார் தருணம் ஈதெனச் சொன்னபோதெல்லாம் பயந்து நான் சோபமடைந்தேன்.

9. அந்தத் தெருவில் ஒரு வீட்டில் ஒருவர் இறந்தார் அலறுகின்றனர் என்று ஒருவரோடொருவர் பேச நான் கேட்டபோதெல்லாம் என்னுள்ளம் பகீரென நடுங்கிப் பதைத்தது.

10. இறந்த வீட்டில் அழுகுரல் கேட்டபோது என்னுளம் பகீரென நடுங்கியது.

11. என்னை நம்பிய மாந்தர் பிணிபல அடைந்து ஏதம் நேர்ந்திடக் கண்டபோது நான் எய்திய சோபமும் இளைப்பும் நடுக்கமும், திகைப்பும், பேரேக்கமும் நீ யறிந்தது தானே.

12. என்னைப் பெற்றதாய், நேயர், உறவினர், துணைவர், பெருகிய பழக்கமிக் குடையோர் மற்றவர் இங்கே தனித்தனிப் பிரிந்து மறைந்திட்ட தோறும், அப்பிரிவை உற்று நான் நினைக்குந்தோறும் உள் நடுங்கி யுடைந்தனன்.

13. என்றனைச் சூழ்ந்து நன்று நாடிய நல்லோர் பிரிவை நான் கேட்டு உற்ற நடுக்கமும் துயரமும் அளவு கடந்தது.

14. கொலை புரிந்திட்ட கொடியவர் இவர் என்று அயலார் குறித்தபோது உலை புரிந்திடு வெந்தீ வயிற்றுள்ளே உற்றதென நடு நடுக்குற்றேன்.

15. இறப்பைக் குறித்திடும் பறையின் வல்லொலி கேட்டபோது என்னுள்ளம் கலங்கியது.

16. ஒருவரை ஒருவர் கொன்றார் என்னும் கொலையைக் கேட்டபோது என்னுள்ளம் நடுங்கியது.

18. பட்டினியுற்றார் பசித்தனர் களையால் பரதவிக்கின்றனர் என்றே பிறரால் கேட்டபோதெல்லாம் உளம் பகீரென நடுக்குற்றேன்.

19 பல்லிகள் பலவா யிடத்து முச்சியினும் பகருநேர் முதற் பல வயினும் சொல்லியதோறும் பிறர் துயர் கேட்கச் சொல்லுகின்றதோ வென்று மனம் நொந்தேன். கூகை வெங்குரலைக் கேட்டபோதும் வருந்தினேன்.

20. காக்கை, பருந்து, இவைகளின் குரல் கேட்டபோது பயந்தேன். ஆந்தைகுரல் செய்யப்பயந்தேன். சாக்குரல் பறவையால் தளர்ந்தேன். பாம்பைக் கண்டபோது நடுங்கினேன்.

21. நாயழுகுரல் கேட்டபோது தியங்கினேன்.

22. கண் இரப்பை துடித்த போதும், தோள் இன்னம் சில உறுப்புகள் துடித்தபோதும் பிறதுயர் காட்டத்துடித்தவோ வென்று பேதுற்று மயங்கி நெஞ்சுடைந்தேன்.

28. சோம்பலால் வருந்தியதோறும் என்னுள்ளம் பயந்தது.

29-31 தூக்கம் வந்தபோது பயத்தோடு படுத்தேன். இந்தத் தூக்கம் தொலைவது எக்காலம் என்று அயர்ந்தேன்.

30-31 கனவில் உள்ளம் நடுங்கியது.

35. காம மாதிகளைச் செறிந்தவர் தங்களைக் கண்டே ஆமைபோல் ஒடுங்கினேன்.

37. புன் புலால் உடம்பின் அசுத்தமும் இதனில் புகுந்து நானிருக்கின்ற புணர்ப்பும் நான் எண்ணி எண்ணி ஏங்கினேன். வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மயங்கி உள் நடுங்கி ஆற்ருமல் என்பெலாம் கருக விளைத்தனன்.

42. பொருளிலே உலகம் இருப்பதால் ஒருவர் வீட்டிற்கு அடிக்கடி போனுல் பொருளுக்காக வருவதாக எண்ணி விடுவார்களென்று ஒரு இடத்திற்கும் போவதில்லை.

43. தடித்த உளத்தோடு பிறர் களித்தே நகைத்தபோதெல்லாம் நடுங்கினேன். நல்ல வாகனங்

களிலேறி உகைத்த போதெல்லாம் நடுங்கினேன். விரைந்து ஓடிய போதெல்லாம் பயந்தேன். பகைத்த போது அயலார் பகைகளுக் கஞ்சிப் பதுங்கினேன்.

45. சண்டை, கூக்குரல் கேட்ட காலத்தில் நான் கலக்கமுற்றேன்.

49. மடவார் வலிந்தெனை அழைத்தபோது கை கலப்பறியேன்.

50. எளியவரை வலியார் அடித்தபோது என் மனம் கலங்கியது.

51. கொள்ளை என்று என் காதில் விழுந்த போதெல்லாம் விரைவிலே நெருப்பை மெய்யிலே மூட்டி வெதுப்பல் போல் வெதும்பினேன்.

52 உரத்து ஒருவரோ டொருவர் பேசிய போதுநடுங்கினேன். கதவை உரத்துத் தட்டியபோது கலங்கினேன்.

53. அசப்பிலே என்னை அழைத்த போது என்ன நேர்ந்ததோ வென்று கலங்கினேன்.

56. பசுக்கள் கன்றுகளாதி கதறிய போதெல் லாம் பயந்தேன். மாடு முதல் பல மிருக மிளைத்தவை கண்டுள மிளைத்தேன். கோழி முதல் பறவை கூவுதல் கேட்டுளம் குலைந்தேன். கொடியர் கையில் வாளை விதிர்த்தல் கண்டு என்னென வெருண்டேன்.

57. பிரிந்த மண்ணுடம்பை மறைத்திட வலி யார் பின்முன் நோக்காது அதிர்ந்திட நடந்தபோ

தெல்லாம் பயந்தேன். மேல்நோக்கி அவர் புகன்றிட்ட தீமொழிகள் பொதிந் திருசெவியிற் புகுந்தோறும் பயந்தேன். வேர்த்து முறிந்த காய் கண்டு உளந் தளர்ந்தேன்.

58. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன். பசியினால் இளைத்து வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத் தேன். பிணியால் வருந்துகின்றோ ரென் னேருறக் கண்டுளந் துடித்தேன். மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர்தமைக் கண்டு மிளைத்தேன்.

59. பலி கேட்கும் சிறிய தெய்வவெங் கோயில் கண்ட காலத்திலும் பயந்தேன்.

60. கொடியர் பிறவுயிரைக் கொல்லத் தொடங்கிய போது பயந்தேன். பிறவுயிர் பதைக்கக் கண்ணினால் கண்டபோதும் பதைத்தேன். வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும் கண்டபோது எண்ணி என்னுளம் நடுங்கினேன்.

63. பாட்டு அயல் கேட்கப் பாடவும் பயந்தேன். பஞ்சணைமேல் படுக்கவும் பயந்தேன். நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தேன்.

## தத்துவ வெற்றி

சுவாமிகள் தத்துவங்களை அடக்கி ஒரு நிலையில் கொண்டு வந்தனர். ஒவ்வொரு தத்துவத்தின் குணத்தை நாமறிய எழுதி வைத்து உதவியுள்ளார். என்னே இப்பெரியாரின் பேருபகாரம்!

மனம் என்பது பேய்க்குரங்கு மடைப்பயல், பரியாசப்பயல் என்றும், புத்தியென்பது உலக வழக்காளி என்றும், சித்தம் என்பது கனமோசக்காரன் என்றும், அகங்காரம் என்பது பொல்லா அடவாதி என்றும், மால் என்பது சகச்சாலச் சிறுக்கி என்றும், மாயை என்பது படுதிருட்டுச் சிறுக்கி என்றும், மாமாயை என்பது பெரிய வஞ்சகன் என்றும், கன்மம் என்பது பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலென்றும், ஆணவம் என்பது இருட் டறைக் கோர் அதிகாரக் குருட்டு முடப் பயல் என்றும், பெருமாயை திரோதாயிஎன்பவை பெண்பிள்ளைகள்என்றும், தூக்கம் என்பது கடையன் என்றும், சோம்பேறி என்றும், பயம் என்பது கொடும்பாவி என்றும், கோபம் என்பது புலைப்பயல் என்றும், காமம் என்பது வலைப் பயல் என்றும், மோகம் என்பது கடைப்பயல் என்றும், மதம் என்பது குறும்புப் பயல் என்றும், உலோபப்பயல் என்றும், மாற்சரியப் பயல் என்றும், பசி என்பது ஓர் பெரும்பாவிப்பயல், துன்பம் என்பது படுபாவிப்பயல், ஆபத் தென்னும் பொய்ப்பயல், அவத்தை என்பது கடைப்பயல் என்றும், மரணம் என்பது பெருந்திருட்டு மாபாவிப் பயல் என்றும் கூறினார். இந்தத் தத்துவங்களைப் பார்த்து "ஈங்கு உங்கள் துள்ளல் ஏதும் என்னிடம் நடவாது" என்கின்றார்.

மனதைப் பார்த்து என் சொல்வழியே நீ இருந்தால் சுகப்படுவாய்; இல்லையானால் உன்னதிகாரஞ் செல்ல வொட்டாது உலகம் சிரிக்க வுனையடக்கிடுவேன் என்றும், என்குறிப்பின்வழி நின்றிடு,புன்முனை மேலிருந்த பனித்துளியாகிய உன்னை இம்மெனுமுன்

னடக்கிடுவேன்; விரிந்து விரிந்து அலையாதே, மெலி யாதே, விடயம் புரிந்த நெறிபுரிந் தவமே போகாதே; பொறிவாய் புரையாதே, புகுந்து மயங்காதே என் றும்; தெளிந்து ஒரு நிலையில் சித்திரம் போலிரு, சிறிது அசைந்தால் சிதைத்திடுவேன் என்றும், படுக் காளிப் பயல்களோடுங் கூடிச் சேய்மையினும் அண் மையினுந் திரிந்தோடி யாடித் தியங்காதே, நான் சொல்லும் வார்த்தையைத் திருவார்த்தை என்று ஆய்வுறக் கொண்டடங்கு; அப்படி நீ அடங்காவிடில் உன்னை அடியோடு வேரறுத்து விடுவேன் என்றும் புத்தி புகட்டி மனதை ஒரு நிலைக்குக் கொண்டு வந்த னர் என்பது புலனாகிறது.

புத்தி யென்னும் தத்துவத்தைப் பார்த்து வழிதுறை ஈதென்றறியாய் வகை சிறிதுமறி யாய், உயங்கி விசாரித்திடவே ஓடுகின்றாய் உணருவதற்கு உளவு அறியாய், நீயும், மனம் அடங்கி யதுபோல் அடங்கியிரு, இல்லையானால் உன்னை மடித் திடுவேன் என்றார்.

சித்த மென்பதைப் பார்த்து காலறியாய் தலையறியாய் காண்பன கண்டறியாய், அலையறி யாக் கடல் போலே யசைவற நின்றிடு, நீ அசைவா யேல் அக்கணத்தே அடக்கிடுவேன் என்றார். அகங்கா ரமே நீ தலைகாலுந் தெரியாமல் அலைந்து திரிகின்றாய், உன்செபம் சிறிதும் நடவாது. இகங்காணவடங்கு. இலையேல் இருந்தவிடந் தெரியாதே எரிந்திடச் செய் வேன் என்றார்.

மால் எனுமோர் சகச்சாலச் சிறுக்கியே! உன் வஞ்சகக் கூத்தெல்லாமோர் மூட்டையெனக்

கட்டித் தலைமேல் எடுத்துக் கொண்டு உன் ஏவல் புரி பெண்களோடே இவ்விடம் விட்டேகிக் கானடைந்து கருத்தடங்கிப் பிழைத்திடு, இல்லையேல் பேசுமுனம் மாய்த்திடுவேன்; பின் முன் பாரேன் என்றார். மாமாயையே! போன வழி தெரியாமல் போய்ப்பிழை; என்றும்; கன்ம மெனும் கடுங்கலகப்பயலே! கங்கு கரை காணாத கடல் போல வினைகள் நன்மையோடு தீமை யெனப் பல விகற்பங்காட்டி நடத்தினை; நின்னடத்தையெல்லாஞ் சிறிதும் நடவாது; என்முன் இருந்தால் நீ அழிந்திடுவாய். இக்கணத்தே நின்னினத்தோடு ஏகுக. ஆணவ மூடப்பயலே! நின் சுற்றத்துடனே போய் விடு. இல்லையேல் பூரண மெய்யருளொளியால் பொன்று விப்பேன். பய மெனுமோர் கொடுப்பாவிப் பயலே! பற்றற என்னை விடுத்துப் பனிக்கடல் வீழ்ந்தொளிப்பாய், தயவுடன் சொன்னேன். நீ இருப்பாயென்றால் உன் தலைக்குத் தீம்புவரும், தலை மாத்திரமல்ல நினது செயலுறும் உள்ளுடம்பழியும் சுற்றமெலாமிறக்கும் என்று விரிவாகக் கூறியுள்ளார்.

## மூன்று தடைகள்

இறைவனை யடையாத வண்ணம் ஜீவர்களைத் தடுப்பது உலக இன்பம். இவ்வின்பங்களை வெறுத்து, நாம் அடைய வேண்டியது அழிவிலா இன்பம். நாம் அனுபவிக்கும் இவ்வின்பங்கள் சிற்றின்பங்கள். அடையமுயற்சி செய்யவேண்டியது பேரின்பமாகும். பேரின்பத்தை யடையா வண்ணம், வலிவு அதிகமான தால் சிற்றின்பங்கள் தடுக்கின்றன. இவைகளை அறவே ஒழித்தல் வேண்டும் என்கிறார் நமது வள்ளலார். அழியும் இன்பங்கள் எதற்காக? அழிவிலா இன்பங்

களை யடைய முயற்சிப்பவர்களே மனிதர்கள். முயற்சியில்லாதபொழுது ஏனைய இழிபிறப்பென்றே சொல்லவேண்டும். ஆசைகள் மூன்று - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை.

**மண்ணாசை, பொன்னாசை :**

நிலம் வேண்டும், வீடு வேண்டும், ஊர் வேண்டும், தேசம் வேண்டும், பொருள் வேண்டும் என்பது கூடாது. மனிதர்கள் இறக்கும்போது உடன் கொண்டு போகவும் முடியாது.

### முதல் திருமுறை

"மண்ணேயம் என்னதென்றான் முன்னொருவன், என்னதென்றான் பின்னொருவன்" இப்படிப் பட்ட மண்ணின் பேரில் ஆசை கூடாதென்றார். இவை, யாருக்கும், எப்போதும், நிலையாப் பொருள். ஆதலால் கூடாதென்றார்.

நெய்வீழ் நெருப்பெனவே பொன்னாசை மேன் மேலும் பொங்கினையே! - பொன்னாசை வைத்து எத்தனைபேர் நின்கண்ணெதிர் நின்றார்? - நிலையில்லா இவ்வாசையை விடு என்றார்.

பிள்ளைப்பெருமான் தமது சிறுவயதிலேயே பொன்னாசையை வெறுத்தனர். பிறர் தமக்குக் கொடுத்த பொருளை எறிந்து விடுவது இவரது வழக்கம்.

### பிள்ளைச் சிறு விண்ணப்பம்

10. "அறிவதில்லாத சிறு பருவத்து மடுத்தவர்
காசவர் மேல் எறிவதும் மேட்டி லெறிந்ததும்
எனக்குள் இருக்கின்ற நீயறிந்ததே"

6-வது திருமுறை 174-ம் பக்கம் 9-வது பாட்டு.

"பொன் செயல் வகையை யுணர்த்தியென்
னுளத்தே பொருந்திய மருந்தை"

### பிள்ளைச் சிறு விண்ணப்பம்

11. "பணத்திலே சிறிது மாசை யொன்றிலை நான்
படைத்தவப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன்; குளத்திலு மெறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்"

பொன் செய் வகையை இறைவன் உணர்த்திய பின் தாம் செய்தபொன்னைப் பலகால் கிணற்றிலும் குளத்திலும் எறிந்தனர்.

**பெண்ணாசை:**

இவ்வாசை கூடாதென்று வெகு விரிவாக நமது வள்ளலார் எழுதியுள்ளார். இதனைப் பற்றி அவர் பாடிய பாக்களினின்று அடியில் கண்ட குறிப்புகளை மாத்திரம் எடுத்தெழுதியிருக்கிறேன். வள்ளலாரின் கருத்து இன்னதென்பதும், அவர் கருப்புவில்லியைத் தலைகாட்ட வொட்டாமல் பரிசுத்த தேகத்துடன் இருந்தாரென்றும் ஏற்படுகிறது. வள்ளலாருக்குக் கலியாணம் ஆனபோதிலும் உலக விஷயத்தில் ஈடுபட்டாரில்லை. தம்து பாடல்களில் பின் வருமாறு கூறியுள்ளார்.

"சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு விவாகம் நடந்த போது அடிமை என்றுசொல்லி ஒரு ஓலைச் சீட்டைக் காட்டினாய்! எனக்கு ஓலை காட்ட வேண்டியதில்லை. அடிமை என்று சொன்னால் போதும், நீர் வர வேண்

டியதில்லை, உம்முடைய கணங்களில் ஒன்று வந்து அழைத்தாலும் வந்துவிடுவேன்; இட்டவேலையைச் செய்வேன். என் கலியாணத்தின் போது நீர் என்னைத் தடுத்தாட் கொள்ளாமல் இருந்த தென்னே?" என்ற கருத்துடன் பாடியுள்ளார். "தேவரீர்அப்போதுதான் வரவில்லை. இப்போது அப்படி வந்தழைப்பதானால், செய்த தன்றி இன்னம் ஒரு மணஞ் செய்வேன்" என்றார். [2-வது திருமுறை கொடி விண்ணப்பம் சிவநேச வெண்பா 52.] இதனால் கலியாணமே வேண்டாமென்பதும், பெண்ணாசை கூடவே கூடாதென்பதும், நமது வள்ளற் பெருமான் கருத்து என்பவை வெளியாகின்றன.

வாயொருபாற்பேச, மனமொருபாற் செல்ல, உடலா யொருபாற் செய்ய அழிவார் நன்றறியார் தீதே நயப்பார். பெண்ணென்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேல், மண்ணின்றார் யார் நடுங்க மாட்டார்கள்? பாச வினைக்குட் படுத்துறு மப்பாவையர்மேல் ஆசை கூடாது என்றார். ஈறிகந்த இவ் வகையால் இம்மடவார் செய்கை யெலாம் கூறுவனேல், அம்ம! குடல் குழம்பும் என்றார் நம் வள்ளலார்.

## முதல் திருமுறை - நெஞ்சறிவுறுத்தல்
## திருநீறணிதல்

சைவர்களாய்ப் பிறந்தவர்கள் திருநீறணிதல் வேண்டுமென்றும்; இடும்போது ஆறெழுத்தை உச்சரித்து இடவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். அப்படி ஆறெழுத்தை உச்சரித்து நீறணிந்திடில் நாமடையும் பயன் இன்னதென்றும் வள்ளற் பெருமான் எழுதியுதவியுள்ளார். இதனைக்

கைக்கொண்டு செய்திடில், அவர் எழுதியுள்ளவாறு பெரும் பேற்றை யடைய ஒரு தடையுமிராது. மனதில் உச்சரித்துத் திருநீறணிந்திடில் அடியில் கண்ட நன்மைகளைப் பெறுவோம். தீமைகள் அணுகா.

## ஐந்தாவது திருமுறை—ஆறெழுத்துண்மை

1. இருமை வளனும் வந்துஎய்தும் - இடரொன்று மெய்தாது.
2. வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் - வன்கண் ஒன்றும் வாராது.
3. ஏரார் செல்வப் பெருக்கிகவா விடும்பை யொன்று மிகந்திடுமே.
4. சுகவாழ் வின்பது துன்னும் - துன்பமொன்றும் துன்னுது.
5. சென்னியணியா வடிசேரும் - தீமை ஒன்றுஞ் சேராது.
6. பாரும் விசும்பும் பதஞ் சாரும் - பழங்கணொன்றும் சாராதே.
7. ஆர்ந்த ஞானமுறும் - அழியா வலக்கணொன்று மழிந்திடும்.
8. பழியா வின்பமது பதியும் - பனிமை யொன்றும் பதியாதே.
9. நினது பதந்தோன்றும் - துன்பமொன்றுந் தோன்றுது.
10. ஈன்ருள் நிகரு மருளடையும் - இடுக்கண் ஒன்றும் அடையாதே.

## 5-வது திருமுறை—புண்ணிய நீற்று மான்மியம்

1. திவசங்க டொறுங் கொண்டிடு தீமைப் பிணி தீரும், பவசங்கடமறும் இவ்விக பரமும் புகழ் பரவும், கவசங்கள் எனச் சூழ்ந்துறும் கண்ணேறது தவிரும்.

2. மாலேந்திய குழலார் தருமயல் போம், இடர் அயல்போம். கோலேந்திய அரசாட்சியுங் கூடும் புகழ் நீடும்.

3. தவமுண்மை யொடுறும் வஞ்சகர் தஞ்சார்வது தவறும், நவமண்மிய வடியாரிட நல்குந் திறன் மல்கும்.

4. துயிலேறிய சோர்வுங் கெடும், துயரங் கெடும். நடுவன் கையிலேறிய பாசந்துணி கண்டே முறிந்திடுமால்.

5. தேருப் பெருமனமானது தேறும் துயர்மாறும்; மாருப்பிணி மாயுந் திருமருவுங் கருவொருவும்

'சிவாய நம' வென்று இடும் நீருனது அடியில் கண்ட நன்மைகளைத்தரும் என்கின்றார் நமது வள்ளற் பெருமான்.

## இரண்டாவது திருமுறை—புண்ணிய விளக்கம்

1. பாடற்கினிய வாக்களிக்கும்.
பாலும் சோறும் பரிந்தளிக்கும்;
கூடற்கினிய அடியவர் தம் கூட்டமளிக்கும்;
குணமளிக்கும்;
தேடற்கரிய சீரளிக்கும்.

2. கருமாலகற்றும்;
பிறப்பதனைக்களையு நெறியுங்காட்டும்;
பெருமாலதனால் மயக்குகின்ற பேதை மடவார்
நசையறுக்கும்.

3. வெய்யவினையின் வேரறுக்கும்;
மெய்ம்மைஞான வீட்டிலடைந்துய்யவமலநெறி
காட்டும்; உன்னர்க்கரிய உணர்வளிக்கும்;

4. கோல மலர்த்தாள் துணைவழுத்தும்;
குலத் தொண்டடையக் கூட்டுவிக்கும்;
நீலமணி கண்டப்பெருமான் நிலையை அறிவித்து
அருளளிக்கும்; சீலமளிக்கும்; திருவளிக்கும்.

5. வஞ்சப்புலக் காடெறியவொரு வாளுமளிக்கும்.

6. கண் கொண்மணியை முக்கனியைக் கரும்பைக்
கரும்பின் கட்டிதனை விண்கொள் அமுதை
நம்மரசை விடைமேல் நமக்குத் தோற்று
விக்கும்;

7. நோயை யறுக்கும் பெருமருந்தை,நோக்கற்கரிய
நுண்மைதனைத் தூயவிடைமேல்வரும் நமது
சொந்தத் துணையைத் தோற்றுவிக்கும்;

8. எண்ண இனிய இன்னமுதை இன்பக்கருணைப்
பெருங்கடலை, உண்ணமுடியாச் செழுந்தேனை
யொருமால் விடைமேல் காட்டுவிக்கும்;

9. சிந்தாமணியை நாம் பல நாள் தேடியெடுத்த
செல்வமதை, இந்தார் வேணி முடிக்கனியை
இன்றே விடைமேல் வரச் செய்யும்.

10. உள்ளத் தெழுந்த மகிழ்வை, நமக்குற்ற துணையை, உள்ளூறவைக் கொள்ளக்கிடையா மாணிக்கக் கொழுந்தை விடைமேற் கூட்டு விக்கும்.

11. உற்ற விடத்திலுதவ நமக்குடையோர் வைத்த வைப்பதனைக் கற்ற மனத்திற்புகுங் கருணைக் கனியை விடைமேல் காட்டு விக்கும்;
செற்றமகற்றித் திறலளிக்கும்.

---

இரண்டாவது திருமுறை—நமச்சிவாய சங்கீர்த் தனலகரி என்னுந் தலைப்பின் கீழ், நாம் பற்றுவைத் துள்ள எந்தப்பொருளை மறந்தாலும் ஐந்தெழுத்தை மாத்திரம் எப்போதும் மறக்கக் கூடாதென்று பாடி யுள்ளார். இதனால் இவர் சிவஞானியரென்பது தெளி வாய்த் தெரிகிறது.

## சமயம்; மதம்; சாதி

உலகின்கண் உள்ள பல்வேறு சமயங்களில் பல் வேறு மதங்களில் பற் பல உட் பிரிவுகள் உள்ளன வென்பதை நாம் அறிகிறோம். இத்தனை சமயங்களும் மதங்களும் ஆதியில் இருந்தனவா வென்பதை நோக் குங்கால், இவை மத்தியில் ஏற்பட்டன வென்றே தெரிகிறது. மத்தியில் உண்டான இந்த வித்தியா சங்களை வைத்துக் கொண்டு சாதியில் நாம் உயர்ந் தவர்கள் என்று ஒவ்வொரு சாதியாரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். தாழ்ந்த சாதி என்று ஒருவரும் ஒத்துக் கொள்ளுவதில்லை. தற்காலத்தில் ஒவ்வொரு

சாதியாரும் முன்னேற்றமடைய முயற்சி செய்து, பழைய நூல்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் தங்கள் குலந்தான் உயர்ந்ததென்று எழுதி வரும் மித்திரர்களைக் காண்கிறோம். இதனால் எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்பது ஏற்படவில்லை. எந்தச் சாதியையும் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை.

சுவாமிகள் சீர்கருணீக குலத்தில் பிறந்தவர். சீர் கருணீசர் குலம் என்றால் கருணீகசாதிப் பிரிவுகள் நான்கினுள் உயர்ந்ததென்று சொல்லிவருகிறார்கள். சீர் கருணீகர் குலம் உயர்ந்ததென்று சொல்ல வருவோமானால், இதில் சிலர் "நாங்கள் கீழ் நாட்டுச் சீர் கருணீகர், அவர்கள் மேல் நாட்டுச் சீர்கருணீகர், எங்களை விட மேல் நாட்டு சீர் கருணீகர் தாழ்ந்தவர்கள், நாங்கள் 64-கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கீழ் நாட்டுச் சீர் கருணீகர்கள், மேல் நாட்டுச் சீர் கருணீகர்களை ஒரு புறம் ஒதுக்கு கிறார்கள். இன்னம் விசாரிக்கப் போனால், இரு உட்பிரிவுகளிலும் பின்னும் இரண்டு உட் பிரிவுகள் உள்ளனவென்பது தெரிகிறது. ஆகச் சீர் கருணீகர் என்ற பிரிவில் இரண்டு உட்பிரிவுகள். அவைகளில் இரண்டிரண்டு உட் பிரிவுகள் ஆக எட்டு என்பது ஏற்படுகிறது. இதில் எதுஉயர்வோ எது தாழ்வோ அது தெரியவில்லை.

இதைப்போல, பல்வேறு சமயங்களில் பல்வேறு உட்பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் இத்தனையென்று சரியான கணக்கு அகப்படவில்லை. சுவாமிகள் தம்முடைய சாதியைப் பற்றியும், மற்ற

சாதிகளைப் பற்றியும் பேசினார்களில்லை. சாதிபேதத்தினால் ஒற்றுமை இருப்பதில்லை. ஒற்றுமை இருந்தால்தான் ஜீவகாருணியம் நன்றாய்ப் பரவும். இவர் சாதி பேதம் கூடாதென்றும், உயிர் ஒன்றானதால் எல்லாச் சாதியாரையும் சமரசமாக்க வேண்டுமென்றும், ஜீவகாருணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பிறருக்குப் போதிக்கவே சமரச சன்மார்க்க சபையையும், சத்திய தருமச்சாலையையும் ஏற்படுத்தி, எந்தச் சாதியாரும் ஒன்று கூடி இருக்கவும், சமபந்தி போஜனம் செய்யவும் அமைத்துள்ளார். அக்காலத்திலுள்ளவர்களுக்கு இது புதுமையாகத் தோன்றினாலும், இப்போது நாம் இதனைச் சாதாரணமாகக் காண்கிறோம்.

கருணையே வடிவெடுத்து வந்த வள்ளற்பெருமான் பிறவுயிர்களிடத்தும் வைத்த இரக்கத்திற்கு அளவேயில்லை. இதனாலன்றோ "ஜீவகாருணியம்" என்ற வசன நூலை நமக்கு எழுதிப் பேருதவி செய்திருக்கின்றனர். மதம் என்பதைப் பேய் என்று சொல்லுகிறார். சாதி சமயச் சழக்கென்றும் பாடியுள்ளார். சுவாமிகள் பாடிய பாக்களில் சாதி சமயத்தைத் தாம் தவிர்த்தோமென்றும், எல்லா மதங்களையும் நிலையாக்க வேண்டுமென்பது இறைவன் அருள் வாக்கென்றும் பாடியுள்ளார். வள்ளலார் காலம் முதற்கொண்டு நாளிது வரையில் நடந்துவரும் நடவடிக்கைகளை நோக்குமிடத்து, கொஞ்சம் கொஞ்சமாகக் கலப்புவிவாகங்கள் நடப்பதும், எல்லா இடங்களிலும் சாதிமத வேற்றுமையில்லாமல் சமபந்தி போஜனம் செய்வதும் இருந்து இப்போது அதி

கரித்து வருகின்றதும் எல்லா ஜாதியாரும் எல்லா மதத்தினரும் அறிந்த விஷயமே. சாதி வேற்றுமை சம்பந்தமான பாக்களில் சில அடிகள் கீழே எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன.

5-வது திருமுறை

தெய்வமணிமாலை 8 - மதமான பேய்பிடியா திருக்க வேண்டும்.

6-வது திருமுறை

சற்குருமணிமாலை 25 - ஓகாள மதங்களை முழுவது மாற்றி ஒரு நிலையாக்க வென்றுரைத்த ஏகா.

அருட்பெருஞ்சோதியகவல் 9-வது பக்கம்: சாதியும் மதமும் பொய்யென ஆதியுணர்த்திய அருட்பெருஞ்சோதி!. எம்மதம் எம்மிறை யென்ற உயிர்த்திரள் அம்மத மென்றருள் அருட் பெருஞ்சோதி.

பிரிவாற்றுமை 7-உடல் செய்மதமும், சமயமும், இவற்றிலுள்ள கற்பனைகளும் தவிர்ந்தேன்.

,, 9-எம்மத நிலையும் நின்னருளியல் விளங்குதல் அறிந்தனன், எல்லாம் சம்மத மாக்கிக் கொள்ளுகின்றேன்.

அச்சோப்பத்து 10 - சாதியை நீள் சமயத்தை மதத்தை யெலாம் விடுவித்து.

வேண்டுகோள் 6-செகதலத்தில் சாதியும், பேதச்சமயமும் நீங்கித் தனித்த என்.

ஆன்மதரிசனம் 7-சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்.

நெஞ்சொடு கிளத்தல் 8 - சாதி சமயச் சழக்கெல்லா மற்றது.

எம்மதமுஞ் சம்மதமெனச் சுவாமிகள் கொண்டது சிவபெருமானால் எல்லா மதங்களும் உண்டாக்கப்பட்டமையால் அவைகளை இகழுதல் சரியன்றென்றும், "எம்மதத்தில் எவர் இருக்கின்றார்களோ அம்மத முத்தியை அவர்கள் அடைவதுண்மையாதலானும், அங்ஙனம் அவர்கள் அடையுமுத்தி உண்மை முத்திகாறும் இறைவனால் ஒன்றன்பின் னொன்றாக மேன்மேலும் அனுபவிக்கச் செய்து, இருவினைகளும் கழலுஞான்று ஞான சத்தியைப் பதியச் செய்து தானே குரவனாய் அருளுபதேசஞ் செய்து தன்னில் சேர்த்துக் கொள்ளுவான் என்னுந் துணிபினால் எம்மத நிலையு நின்னருணிலையி லிலங்குத லறிந்தனன்" என்றும் சிவபெருமானது கருணைத் திறத்தினை வருணித்திருத்தல் காண்க. சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட எல்லாச் சமயமும் ஒன்றென்று தாயுமான சுவாமிகளும் பின் வருமாறு பாடியுள்ளார்.

"வேறு படுஞ் சமய மெலாம் புகுந்து பார்க்கின்;
விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லான்,
மாறு படுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியினதித் திரள்போல் வயங்கிற்றம்மா"

சாதியையும், குலத்தையும், சமயத்தையுந் தவிர்க்காது ஒருவன் மேனிலையை அடைவது முடியாது என்பதைக் குறிப்பிட்டதும் காண்க. இதனைப் பற்றிக் கூறும் நூல்கள்:

1. சிவாகம மான தேவிகா லோத்தரம்:

சமயா சாரமும், சங்கற்ப விகற்பமும்,
அமையா தாங்குல வாசார மானதும்
இமையா தாரும் விடாதவிவ் வாழ்க்கையும்
அமையார் தோளாய் விடுதலா சாரமே.

2. தாயுமானவர்:

பன்முத்திரைச் சமயம் பாழ்படக் கல்லாலடிக்கீழ்ச்
சின்முத்திரையரரைச் சேர்வேனோபைங்கிளியே!

மெய்த்தகுலங் கல்விபுனை வேட மெல்லாமோட
விட்ட சித்தரொன்றுஞ் சேராச் செயலறிவ
தெந்நாளோ.

## கடவுள் ஒன்று என்பது

மேலே சொன்னபடி சாதி வேற்றுமை இருத்த லினால் ஒவ்வொரு சமயத்தாரும், ஒவ்வொரு மதத்தி னருக்கும் வெவ்வேறு கடவுள்கள் இருப்பது நமக் குத் தெரிந்த விஷயம். சமயங்கள், மதங்கள் வெவ் வேறு இருக்கும்போது கடவுள்கள் வெவ்வேறு இருப்பது அதிசயமல்ல. எத்தனை கடவுள்கள் உல கில் உண்டோ அத்தனை மோக்ஷங்கள் இருக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள். ஆனல், எல்லா மதத் தினருக்கும் சமயத்தாருக்கும் கடவுள் ஒன்று மோக்ஷமும் ஒன்று. சமயமற்றவர்களுக்கும் மோக்ஷம் ஒன்றுதான்.

நம்முடைய அரசர் சீமையில் இருக்கிறார். ராஜாங்கத்திற்குச் செய்ய வேண்டிய எல்லா வேலை களையும் அவரே செய்கிறதில்லை. கவர்னர் ஜெனரல்,

கவர்னர் கலெக்டர் முதலிய உத்தியோகஸ்தர்கள் அரசருக்குக் கீழ் இருந்து கொண்டு அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட வேலைகளைச்செய்து வருகிறார்கள். இது போலவே இறைவனுக்குக் கீழிருந்து ஆக்கல், அளித்தல், அழித்தல் தொழில்களைச் செய்ய மூன்று அம்சதேவர்கள் இருக்கின்றனர். அவர்கள் அத்தொழில்களைச்செய்து வருகிறார்கள். இஃதன்றியும், ஒரே கடவுளை, பலசமயத்தாரும், மதத்தினரும் பலபெயர்களால் அழைத்துக்கொண்டு வழிபட்டு வருகிறார்களேயொழிய, பலகடவுளர் இல்லை. இதனை விளக்கவே நமது வள்ளலார்—6வது திருமுறை—அனுபவமாலை 89-வது பாட்டில்:

"பிறசமயத்தார் பெயரும் அவர்பெயரே, பித்தனென்றே பெயர் படைத்தார்க்கு எப்பெயர் ஒவ்வாது? எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே."

என்று கூறியுள்ளார்:—

கடவுள் ஒன்று என்று பாடியுள்ள பாடல்களில் சில இதனடியில் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன.

### கடவுள் ஒன்று

முதல்திருமுறை:

மகாதேவமாலை-21,

மலைமேலுங் கடன்மேலு மலரின்மேலும் வாழ்கின்ற மூவுருவின் வயங்குங்கோவே.

இரண்டாவது திருமுறை:

தனிமைக்கிரங்கல்—(1.) ஆக்கலாதிய வைவந் தொழினடத்த அயன்முதலிய வைவரை யளித்து.

மூன்ருவதுதிருமுறை:

சோதிட நாடல்—(3.) அளித்து மூன்றுபிள்ளை களால் அகில நடக்க ஆட்டவல்லார்.

5-வது திருமுறை

செல்வச் சீர்த்திமாலை—(5.) மூவர்க்கருள் செய்தே, ஆக்கல், அளித்தல், அழித்தல் எனுமம் முத்தொழிலுந் தருவோனே.

போற்றித்திருவிருத்தம்...(5.) மூவடிவாகிநின்ற முழுமுதற்பரமே.

6வதுதிருமுறை:

அருட்பெருஞ்சோதி அகவல்.

22—23, வதுவரி- ஒன்றென விரண்டென வொன்றிரண்டென விவை அன்றென விளங்கிய அருட்பெருஞ்சோதி.

875—880-ஒன்றறிரண்டதுவொன்றினிரண்டது வொன்றினு ளொன்றது வொன்றெனு மொன்றே.

ஒன்றலவிரண்டல வொன்றினிரண்டல ஒன்றினு ளொன்றல வொன்றெனுமொன்றே; ஒன்றினி லொன்றுள வொன்றினி லொன்றில, ஒன்றுறவொன் றில வொன்றெனுமொன்றே.

பரசிவநிலை—9. ஒன்ருன தெய்வம்.

நடராஜபதிமாலை—10. ஒன்ருகி நன்ருகி நின்ருடு கின்ற.

பிரிவாற்ருமை—6. வண்ணம் வேறு, வடிவு வேறு எனினும் உண்மை ஒன்று.

8. உள்ளதே உள்ளது இரண்டில்லை எல்லாம் ஒரு சிவமயம்.

ஆன்மதரிசனம்—9. ஒன்றெனக்காணு முணர்ச்சி.

அருள்விளக்கமாலை...86. எவ்விடத்தும், எவ்வுயிர்க்கும் இலங்கு சிவமொன்றே.

அநுபவமாலை—87. எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும் பெருஞ்சோதியரே இறைவர் என்பதறியாதே இம்மதவாதிகள் தாம், கவ்வை பெறுகுருடர் கரி கண்ட கதை போல கதைக்கின்றார்.

89. பிறசமயத்தார் பெயருமவர் பெயரே கண்டாய் பித்தரென்றே பெயர் படைத்தார்க்கு எப்பெயர் ஒவ்வாதோ-அச்சமயத்தேவர் மட்டோ நின் பெயர் என் பெயரும் அவர்பெயரே எவ்வுயிரின் பெயருமவர் பெயரே.

திருவடிப்பெருமை—17. தோற்ற மொன்றே வடிவொன்று, வண்ணமொன்று விளங்குஞ்சோதியொன்று, மற்றதனில் துலங்கும் இயல் ஒன்றே.

தனிப்பாடல்—160. உருவராகியும் அருவினராகியும் உருவருவினராயும் ஒருவரேயுளார் கடவுள் கண்டறிமினோ வுலகுளீர் உணர்வின்றி இருவராமென்று மூவரேயாமென்று மியலுமைவர்களென்றும் எருவராயுரைத்துழல்வதென்னுடற் குயிரிரண்டு மூன்று எனலாமோ.

இதனால், சிவபெருமான் ஒருவரே எல்லாவற்றையும் நடப்பித்து வருகிறாரென்பது வள்ளலாரது அபிப்பிராயம்.

## யாக்கை நிலையாமை

நிலையாத இந்த உடம்பை நாம் மெய்யென்று பொய்ம் மயக்கம் கொள்ளுகிறோம். உயிர் பிரிந்த உடம்பை வைத்துப் பெண்கள் கூடி அழக்கண்டும்' பெண்டு பிள்ளைகளை விட்டு, பிணத்தை எடுத்துக் கொண்டு போவதைக் கண்டும் ஊரார் பிணத்துடன் சென்று நீராடல் கண்டும், நம் முடல்மேல் அதிக ஆசை வைத்துள்ளோம். இறந்தார், பிறந்தார், இறந்தார் எனுஞ்சொல் செத்தவுடன் பறையோசை ஒலிக்கவும், விக்குள்எழ நீர் விடுமென்று சொல்லுவது கேட்டும், நின்றார் இருந்தார் நிலைகுலைய வீழ்ந்துயிர் துறப்பதைத் தெரிந்தும், சாப்பிட்டதும் தும்மினார்' அம்ம! உயிர் விட்டார் என்பதைக் கேட்டிருந்தும், சாப்பிட்டார், படுத்தார், உறங்கினார், பேருறக்கங் கொண்டார் என்பதைக் கேட்டும், நம் ஆசையைக் குறைத்தோமில்லை. உடல் இளைத்தவுடன் பருக்க வகை தேடுகிறோம். நேற்று மணம்புரிந்தார் இன்று நீறானார் என்பதைப்பார்த்தும், தெருவில் உலவப் போனவர் வானுலகம் சென்றார், இருமினார் இறந்தார். யோனி நெருக்கில் உயிர்போய் பலனற்று வீழ்ந்தது கேட்டிருந்தும், கா வென்று வீழ்ந்தவர் கணம் பிணமாகக் கோவென்றழுவார், அன்னை முலைப்பால் அருந்துங் காலையிலே காலன் உயிர் குடிப்பதும், பெற்றார் மகிழ்வெய்தப் பேசி விளையாடுங்கால் அற்றுவி போவது, கண்டும், கேட்டும், உடம்பின்மேல் விருப்பம் வைத்து அலங்காரங்கள் செய்கிறோம்.

இது தோற் கூடு, நீரின்மேலெழுதும் எழுத்திலும் விரைந்து நிலைபடா உடம்பு, நீர்ப்பொறிபோல்

நசிக்கும் உடல், நொடிக்குளே மறையு முட்டப்பு-குடி கொண் மலஞ்சூழ் நவவாயிற்கூடு, குருதி நிறைந்த குறுங்குடம், பாவமெனுமோர் பெருஞ்சரக்குக் குப்பை, பொள்ளற் குடத்திற் புலாலுடம்பு, கூட்டு மெலும்பாற்றசையதனுற் கோலும் பொல்லாக் கூரை, புண்ணும் வழும்பும், புலால் நீரும், புழுவும் பொதிந்த பொதிபோல நண்ணுங் கொடிய நடைமனை, துன்பைத் தாங்குகின்ற தூணத்தலம்போல் சோரி மிகுந்த தோல், மெய்யென்ற பொய்க்கூரை, அனித்த உடம்பு, புன்புலால் உடம்பு, என்று வெகு விரிவாக எழுதியுள்ளார் நமது வள்ளலார்.

முதல் திருமுறை :—நெஞ்சறிவுறுத்தல் 461-514.
2-வது திருமுறை :—ஆநந்தப் பதிகம் 1—11.
நாளவத்தலைசல் - 3, 6, 8, 9, 10.

அம்மைப் பதிகம் :— பொய்க்கூரை.

6-வது திருமுறை :—நெஞ்சொடு புலத்தல்—4-அனித்த உடம்பு. பிள்ளைப்பெரு விண்ணப்பம் 37 - புன்புலால் உடம்பு.

வாழ்வு

2-வது திருமுறை :—சல்லாபலகரி - வாழ்வெல்லாம் அந்தரம், அம்பலம்.

5-வது திருமுறை :— காணுப்பத்து, 6 - எட்டிக் கனியாம் இவ்வுலகத்திடர்.

7, பள்ள உலகப் படுகுழி.

10, நடலையுலக நடையி லிற்றை.

எத்தாப்பிறவியிழிவு - 4, இருட்டுவாழ்க்கை.

தெய்வமணிமாலை, -14

**கோபம், இளமை**

இவை, முதல்திருமுறை, நெஞ்சறிவுறுத்தல் என்னும் தலைப்பின் கீழ் வெகு விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. பக்கங்கள் 200-201-

## பக்தி

முதல் திருமுறை:— விண்ணப்பக்கலிவெண்பா 304. தண்ணீர்போல் நெஞ்சம் உருகி.

405. உள்ளம் நீராய் உருகி.

இரண்டாவது திருமுறை:— தனித்திருவிருத்தம் - 16. உலைபயின்ற அரக்கெென நெஞ்சுருகி.

ஆருவது திருமுறை — அனுபவஈடு - 5. இதய முருகித் தளதளவென்று இளகி, இளகித் தண்ணீராய், அருத்திப் பெருநீர் ஆற்ருேடு சேர்ந்து அன்புப் பெருக்கில்.

ஞானசரியை. 1 - நினைந்து நினைந்து......

"பக்தி" என்று மன நெகிழ்ச்சி, மன உருக்கம்,

"நினைந்து நினைந்து" என்னும் பாட்டில் "அருளமுதே" என்பது தாசமார்க்கத்தையும், "நன்னிதியே" என்பது சற்புத்திர மார்க்கத்தையும் "ஞான நடத்தரசே" என்பது சக மார்க்கத்தையும், "உரிமை நாயகனே" என்பது சன்மார்க்கத்தையும் தழுவிக் காட்டும்.

## புருவமத்தியின் விசேஷம்

இரண்டாவது திருமுறை:— வேட்கைக் கொத்து - 10, என்புருவநடுவிருந்தான்.

ஆறுவது திருமுறை:— அருள்விளக்கமாலை, 19 கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்கலை. நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே.

712-வது பக்கம் — புருவமத்தி நமது ஆன்ம அறிவுள்ள இடம்.

முதல் முதல் சோதிதரிசனம் நிகழும் இடம் புருவமத்தி. அவ்விடத்தைக் குறிக்கவே நமது நாட்டார் சந்தனம் முதலிய பொட்டிடுதலுமுண்டு. புருவ மத்தியைச் சுட்டிப் பாடிய பாக்கள் பல.

நமது தேகத்தில் புருவமத்தியில் ஆன்ம அறிவு என்கிற கர்ப்பூரத்தில் கடவுள் அருள் என்கிற தீபம் விளங்குவதால் பாவித்துப் பார்த்து அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும் ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து ஓங்கார பஞ்சாக்ஷரம் ஞாபகம் செய்தல் வேண்டும்.

"கையறவிலாது நடுக்கண் புருவப் பூட்டு
கண்டு களிகொண்டு திறந்துண்டு நடு நாட்டு"

என்பதையும்.

## மதுவிலக்கு

6-வது திருமுறை :— தனிப்பாடல். 157 - "மதிப்பாலை...உணர்வழிக்கும் மடிப்பாலை குடிப்பாரிங்கே" என்பதையும் காண்க.

## வெறிவிலக்கு

6-வது திருமுறை :—தனிப்பாடல் - பக்கம் 492.
இம்மை யறையனைய வேசூர மாதருமா
இம்மை யுமை யிம்மையையோ வென் செய்த—
தம்மை மதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா.

### அந்வயம்

இ, மையல், தையல், நையவே, சூரமாதரும் ஆ!
இ, மை, உமை, இம்மை, ஐயோ! என் செய்த?
தம்மை, மதன், மாமாமாமாமா?
மாமாமா மாமாமா மாமா—மாமாமா மாமாமா?

### பொழிப்புரை

இந்த காதல் நோய் மங்கையை வருத்தா நிற்கவே சிறு தெய்வமகளிரும்
ஆ! இந்த ஆட்டுக் கடாவும் உங்களை இப்போது அந்தோ என்ன செய்தன?
பலியிடுவதனாலேயே காதலர்களைக் காமன் அணுக அஞ்சுவானு (5) ஐந்துமா = அஞ்சுமா)
(8) எட்டுமா (6) ஆறுமா (எண் + அறுமா)
அல்லது அவர்களின் காதல் எண்ணந்தான் அறப் போகின்றதா.

### விளக்கம்

ஒரு பெண்ணை இளமையிலிருந்து காதலித்த ஒருவன் அவளை மணஞ் செய்துகொள்ளட பொருள் தேடிச் சென்ருன். தலைவன் பிரிவால் காதல் நோய்

அடைந்தாள். தேகம் மெலிவடைந்து கொண்டு வந்தது. இதனைக் கண்டதாய் வேறொருத்திக்கு (கட்டு வித்தியிடம்) காட்டி "இப்பெண் அடைந்த நோயைத்தெரிய அறிந்து சொல்லும்" என்றவுடன் கட்டுவித்தி நெல்லிட்டுப்பார்த்து "சிறு தெய்வம் இப்பெண்ணைப் பற்றியிருக்கிறது" என்றாள். பிறகு தாய் "வேலன் வெறியாடட்டும், ஆட்டுக்கடா பலி கொடுக்கவேண்டும்" என்று தீர்மானித்து ஆட்டுக்கடாவைப் பலிகொடுக்கத் துணிந்தார்கள். தலைவி "ஈதென்ன அழகு, தலைவனைக் காணாததால் உண்டாகிய இந்நோயைப் பிறர் அறியாதபடி நான் இதுவரையில் மறைத்து வைத்திருந்தேன்; சிறு தெய்வத்திற்கு ஆட்டுக்கடாவைப் பலி கொடுத்தாலும் என் உண்மையான நோய் நீங்கப்போகிறதில்லை. ஆடு ஒரு குற்றமும் செய்யவில்லை. என்றால் அதைக் கொல்வானேன் என்று, அவள் வெட்கத்தை விட்டு விட்டாயினும் வெளிச்சென்ற தலைவனுக்கும் தனக்கும் அதுவரையில் நிகழ்ந்த ரகசியத்தை வெளியிடுகிறேன் என்று துணிகிறாள்.

பலியிடத் துணிந்தபோது வெறியாடு தலையும், பலியிடுதலையும் நீக்கும் பொருட்டு ஆடு முறையிடுவதாகப் பொருள் கூறுவதுமுண்டு.

## பிணங்களைப் புதைத்தல்

"ஆன்மநேய உரிமை" என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள பாட்டுக்களில், வள்ளலார், பிணத்தை எடுத்துக்கொண்டு சுடலைக்குப் போகும்போது மெதுவாகப் போக வேண்டுமென்றும், பிணத்தைச்

சுடுதல் கூடாதென்றும், அப்படிச் சுட்டபின் அந்தச் சாம்பலும் எருவுக்கு உதவாதென்றும், கழுகு முதலி யன தின்ருலும் ஒருபயன் உண்டு என்றும் கூறியுள் ளார். பரனளிக்கும் தேகமிது, சிரநெளிக்கச் சுடுவது அபராதம் என்ருர். சிவஞானிகளின் உடலத்தினைப் புதைக்குமாறு திரு மூலயோகிகள் திருமந்திரத்துள்

"அந்தமின் ஞானி தன்னுகந் தீயினில்
வெந்திடி னுடெலாம் வெப்புத்தீயினில்
நொந்தது நாய்நரி நுகரினுண் செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே."

"எண்ணிலா ஞானியுடலெரிதாவிடி
லண்ணா றங் கோயிலழலிட்ட தாங்கொக்கு
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்ன ரிழப் பாரரசே!" என்ருர்.

சிவஞானிகளி னுடலங்களைத் தீயிலிட்டுச் சுட் டால் நாட்டிற் சுரநோய் பரவுமெனவும், நாய் நரியும் தின்னவிட்டால் நாட்டிற் கலக முண்டாகி மற்றைய ருடலை நாய் நரி தின்ன நேருமெனவும், சிவஞானியின் சரீரத்தினைத் தீயிலிட்டுக் கொளுத்தினுல் சிவாலயத் தினை நெருப்பிட்டழித்ததற்கொக்கும். அன்றியும் மழை குன்றும். நாட்டிற் பஞ்சமுண்டாகும். அரசி னர் தங்களரசினையிழப்பர் என்றும் கூறியிருக்கின் றனர். இக்கருத்தினையுத்தேசித்தே பிள்ளையவர்கள் சுடுவதனிலும் புதைப்பதே சிறந்த தென்ருர்கள். ஞானியர்க்கன்றே இச்சடங்கெனில் ஞானியையும் அஞ்ஞானியையும் அறிவதெங்ஙனம்? சுடுவதனுலறி யாது தீங்கு நேரும். புதைப்பதனுல் அங்ஙனம் நேரி டாது. ஆதலினுல் அவ்வாறு கூறினர்.

"புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணிய னல்நோக்கி ஞட்டிலழிவாரும்
மண்ணி லழியிலலங்கார பங்கமாம்
மண்ணுல கெல்லா மயங்கு மனன்மண்டியே"—

என்று சைவருடலைப் புதைப்பது புண்ணிய மெனத்திருமூல நாயனர் கூறியிருத்தலைக் காண்க.

## வள்ளலார் காலத்தில் நடந்த அற்புதங்கள்.

(1) சென்னைக்கடுத்த வியாசர் பாடிக்குச்சென்று சிவசரிதம் சொல்லித் திரும்புங்கால் ஒரு பாம்பு வள்ளலார் காலைப் பின்னிக் கொண்டது. இரண்டொரு நிமிஷம் கழித்து சர்ப்பத்தை போம்படி ஏவினர். அது விலகிவிட்டது.

(2) கருங்குழியில் இருந்தவெங்கடரெட்டியார் வீட்டில் பிள்ளைப்பெருமான் இருந்தபோது புதுப் பாத்திரத்தில் இருந்த தண்ணீரை எண்ணெய் என்று விட்டு விளக்கெரித்தார்.

(3) கருங்குழி கிராமத்தில் பாலுரெட்டியாருக்குள்ள குஷ்டத்தை விபூதி கொடுத்து நீக்கினர்.

(4) முத்து நாராயண ரெட்டியாருக்குக் கண்குற்றம், வள்ளலார் கொடுத்த விபூதியால் நீங்கிற்று.

(5) அன்பர்களுடன் வெளியில் சென்றபோது மழைபெய்தது. வள்ளலாரைத்தவிர மற்றவர் நனைந்தார்கள்.

(6) கல்லாங்குளம் என்னும் குளக்கரையில் வள்ளலார் உலாவிக்கொண்டிருந்தபோது திடீரென ஒருவன் உபதேசம் பண்ணும்படி கேட்டான். அருகில் இருப்பதைப் பார்த்தவன் அதே நிமிஷத்தில் அவர் ஒருமைல் தூரத்திற் கப்பால் இருப்பதைப் பார்த்தான்.

(7) சித்தர்நூலின் உண்மையைக் காட்ட, செம்பைச் சில மூலிகைகளைக் கொண்டு பொன்னுக்கிக் காட்டிக் கிணற்றில் எறிந்தனர். [பிள்ளைச்சிறு விண்ணப்பம்—11.]

(8) நாயடு ரெட்டியார் விரும்பினபடி ஒரு பாத்திரத்தில் நீர் வார்த்து ஒரு பொட்டலமருந்தை அதில் போட்டு மூடி வைத்திருந்து அதைத் திறந்து பார்க்கையில் அது தங்கச்சுண்ணமாயிருந்தது.

(9) கூடலூர் அப்பாசாமி செட்டியாரின் தமையனுருக்கு நாக்குப் புற்றை வீபூதி கொடுத்து நீக்கினர்.

(10) கூடலூரில் தேவநாயகம் பிள்ளைவீட்டில் இரும்புத் தகட்டை ஒரு மூலிகையால் தங்கமாக்கிக்காட்டி எறிந்தார்.

(11) செஞ்சிமலையில் சுற்றிவரும்போது, தேவநாயகம் பிள்ளைக்குப் பசியுண்டாயிற்று. பெரியலட்டும், ஒரு செம்புத் தண்ணீரும் வள்ளலார் கொடுக்க அவர் உண்டார்.

(12) மஞ்சகுப்பத்திலிருந்து இராமகிருஷ்ணப்பிள்ளை இரவில் தினந்தோறும் வள்ளலார் கூடலூரில்

இருக்கும் போது வருவது வழக்கம். திரும்பிப் போகும் போது எந்த இடத்தில் அச்சமாயிருந்ததோ அந்த இடத்தில் அவருக்கு முன் துணையாக ஒரு மனிதன் செல்வது போல் இருக்கும்.

(13) வாழைமரத்திலிருந்த பாம்பு வள்ளலார் உச்சியில் தீண்டிற்று. போய்ப் பார்த்தபோது பாம்பு இறந்து கிடந்தது.

(14) பங்குனி உத்தரத்தில் அப்பாசாமி செட்டியார் வீட்டில் இரவில் சித்தர் ஒருவர் தோன்றினர். புதுவை துரைசாமிபிள்ளை உடன் செல்ல சித்தர் மறைந்தனர். உள்ளே போய்ப் பார்த்தால் லட்டு வைத்திருந்தது. அதைஎல்லாருக்கும் வள்ளலார் பங்கிட்டுக் கொடுத்தனர்.

(15) வேட்டவலம் ஜமீன்தார் மனைவியர் இருவருள் ஒருவருக்கு மகோதரமிருந்தது, மற்றவரைப் பிரம்ம ராக்ஷசி பிடித்திருந்தது. வள்ளலார் விபூதி கொடுக்க இருவரும் சுகமடைந்தனர்.

(16) வள்ளலாருக்குத் தெரியாமல் அம்மாபுரத்து வேம்பய்யர் ரசவாதம் செய்ய ஆரம்பித்தபோது அனல் பட்டுக்கண்கள் அவிந்தன—பிறகு வள்ளலாரிடம் தப்பிதத்தை ஒத்துக்கொண்டு வள்ளலார் கையால் அய்யர் கண்ணில் ஜலம் விடவே கண்கள் தெரிய சௌக்கியமானர்.

(17) சித்திரைமாத வெயிலால் சாலைக்கு வந்தவர்கள் கஷ்டப்பட்டபோது ஒரு செம்புத் தண்ணீரைக் கொண்டுவந்து தம் காலில் விடச்

சொன்னூர். சிறிது நேரத்திற்குள் நான்கு செவி மழை பெய்தது.

(18) புதுப்பேட்டையில் மழை யில்லாத போது கிணறுகள் வற்றிப் போயின. வள்ளலார் தம் தலையில் ஐந்து குடம் தண்ணீர் விடச்சொல்லி தண்ணீர் விட்டபோது கிணறு ஊற்றெடுத்து நல்லஜலம் நிறைய வற்ருமல் இருந்தது.

(19) தருமசாலையில் ஒரு நாளிரவில் நூறுபேர் வந்தனர். சமையலான உணவு மிகச்சிறிதேயாயினும் எல்லாருக்கும் தமது கையாலேயே பரிமாறினர்—அப்படியும் மீதி இருந்தது.

(20) விருத்தாசலத்தில் ஓர் அன்பர் சுவாமிகளுக்கு அமுதளிக்க நினைத்தனர். சுவாமிகள்திடீரென்று அவர் வீட்டிற்குவந்து பருப்புத் துவையலும் ரசஅன்னமும் உண்டனர்.

(21) குள்ளஞ்சாவடியில் இரவில் திருடர்கள் வந்து இராமச்சந்திர முதலியார் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றும்படி சொல்லித் தடியாலடிக்க கைதூக்கினூர்கள். வள்ளலார் அவர்களைப் பார்த்து "அவசரமோ" என்று சொல்ல, கைகள் அசையாது நின்றுவிட்டன.

(22) ஒரு நாள் எட்டுமணி வரையிலும் விளக்கில்லாமே வள்ளலார் எழுதிக் கொண்டு வர, வந்தவர்கள் விளக்கில்லையே வென, ஆமாம் கொண்டுவாருங்கள் என்றனர்.

(23) கொங்கராப்பாளையத்தில் 96,வயதுள்ள கிழவிக்கு நடுக்கம் நீங்கிற்று.

(24) குறிஞ்சிபாடி ஹெட் கானிஸ்டேபிள் விஜய ராகவலு நாயுடுவுக்கு பிறர் வைத்த சூனியம் நீங்கிற்று.

(25) ஒரு நாள் பிள்ளையவர்கள் திருவொற்றியூர் கோயிலில் ஒரு புறத்தில் உறங்கிவிட்டனர். கோயிலாட்கள் இவர் உள்ளிருந்ததைப் பாராமல்கதவுகளைத்தாளிட்டுக்கொண்டுவீடுபோய்ச் சேர்ந்தனர். பசியுடனிருந்ததால் இறைவன் குருக்கள் போல் வந்து அவருக்கு அன்னமளித்தனர். இவைகளைத் தவிர பலகிராமங்களில் குன்ம நோய், கண்ணோய், இன்னும் மற்ற நோய்களால் வருந்தியவர்களுக்கு விபூதி கொடுத்துப்பிணிகளை நீக்கினர்.

2. A மற்றொருநாள் திருவொற்றி யூரிலிருந்து வீட்டுக்குத்திரும்பிவந்தபோது இரவு பத்து மணிக்கு மேல் ஆய்விட்டது. கதவைத்தட்டாமல் தெருத் திண்ணையிலேயே பிள்ளையவர்கள் படுத்துறங்கினர். பிள்ளையவர்களின் தமக்கை வடிவத்துடன் வந்து தாமரை இலையில் வெண்பொங்கல் அளித்துச் சென்றனர் தாயினுமினியதந்தை. அவருடைய தமக்கை அதிகநேரம் ஆகியும் வரவில்லையேயென்ற ஏக்கத்துடன் தெருக்கதவைத் திறந்து வெளியேவர, தம்பியார் தூங்குவதைக்கண்டு,எழுப்பிச் சாப்பிட அழைத்தனர். கொஞ்ச முன்பு நீ தானே எனக்கு அன்னம் அளித்தாய் என்று கீழே யிருந்த தாமரை இலையைக் காட்டினார். பின்பு உண்மை தெரிந்தது.

2. B. ஒரு நாள் அம்மன் சந்நிதிக்குத் தரிசிக்கச் சென்றபோது இறைவன் ஒரு பிராமணர்போல்

வந்து "சதுர் வேதசங்கிரகம்" எனும் ஏட்டுச் சுவடியைத்தந்து பின் மறைந்தனர்.

## ஆருவது திருமுறை அருள் கிடைத்தது

அருட்பெருஞ்சோதி அகவல் :—

7-பக்கம். என்னையும் பணிகொண்டிறவா வரம்அளித்
தன்னையிலுவந்த அருட்பெருஞ்சோதி

இன்புறு சித்திகளெல்லாம் புரிக.

8-பக்கம். இறவா வரமளித் தென்னை மேலேற்றிய

எண்ணிய வெண்ணியாங்கியற்றுக.

9-பக்கம். எங்குல மெம்மின மென்ப தொண்ணூற்
ருறங்குலமென் றருளருட் பெருஞ்சோதி.

10. மாய்ந்தவர் மீட்டும் வருநெறிதந்திதை ஆய்ந்திடேன்
றுரைத்த வருட் பெருஞ்சோதி,

மூவகை சித்தியின் முடிபுகண் முழுவதும் ஆவகை எனக்
கருள்.

சித்தியின் பொருட்டே முத்தியை அடைவது
முத்தியென்பது நிலை முன்னுறு சாதனம்
சித்தியென்பது நிலை சேர்ந்தவனுபவம்.

11. கற்பக மென்னுளங்கைதனிற் கொடுத்தே அற்புத மியற்றுகதிர் நல மென்னிரு கண்களிற் கொடுத்தே அதிசயமியற்று அருளொளி யென்றனி யறிவினில் விரித்தே அருள்நெறி விளக்கெனும் பரையொளி என்மனப்பதியினில் விரித்தே அரசது வியற்றுக.

எல்லாம் வல்ல சித்தெனக்களித் தெனக்கு அல்லா திலேயெனு மருட்பெருஞ்சோதி.

12. உருவமு மருவமு முபயமு மாகிய.

31. எங்கே கருணை யியற்கை யினுள்ளன அங்கே விளங்கிய; கொல்லா நெறியே குருவருள் நெறியென.

33. அருளரசியற்றுக.

36. எட்டிரண்டறிவித் தெனைத்தனியேற்றிப் பட்டி மண்டபத்தில் பதித்த மெய்த்தந்தையே.

43. ஊழிதோறூழி உலப்புறுதோங்கி வாழி.

46. என்னை வேதித்த என்தனியன்பே! பொன்னுடம் பெனக்கு பொருந்திடும் பொருட்டாய் என்னுளம் கலந்த என்தனியன்பே!

நெஞ்சொடுகிளத்தல்—10. ஒக்க அமுதத்தையுண் டோம் இனிவிக்கல் வராது—நெஞ்சே.

பிரிவாற்றுமை—8. இரவில் போந்து நின்கை விட்டகலா ஒரு பெரும்பொருள் என்கையிற் கொடுத்துக் களிப்பித்தாய்.

9. சாமத்திரவில் எழுந்தருளி…அமுதம் கனிந்தளித் தாய். 10. பாதிஇரவில்…. துலங்குகின்றுய்.

சிற்சத்திதுதி—9. அருளமுதளித்து என்றனை மெய்யருட் கரத்தால் எடுத்த கொடியே சித்து யெலாம் இந்தா மகனே என்று எனக்கே கொடுத்த கொடியே.

10. தனிப்பேரருட்செங்கோல் செலுத்தும் சுத்த சன்மார்க்கக் கோட்டைக் கொடியே.

நடராஜபதிமாலை—10. அன்றிரவு வந்தெனக் கருளொளியளித்த ஐயனே.

15. சித்தெலாம் செய்யெனத் திருவாக்களித்து எனைத் தேற்றியருள் செய்தகுருவே.

18. மருவியெனையாட்கொண்டு மகனுக்கியழியாவரந் தந்த மெய்த் தந்தையே.

21. எல்லாம் படைத்திடுக என்று எனக்குப் பண்புறவுரைத்த.

22. இரவு பகலில்லாத பெருநிலையிலேற்றி என்னை இன்புறச் செய்த குரு; ஆழியோடணையளித்து உயிரெலாம் காத்து விளையாடென்றுரைத்த அரசே.

24. வாட்டமுடன் செய்வகையறியாது உறங்கிய போது, விடியற்காலையில் என்னருகே வந்து, எழுப்பி உன் எண்ணம் பலிக்க இவ்வருளமுதம் உண்டு இன்புறுக என்றகுருவே.

27. சுகங்களையடைந்திடப்புரிதி நீ என் பிள்ளையாதலாலே இவ்வேலைபுரிக.

6-வது திருமுறை

நடராஜபதிமாலை—30. இந்நாள் தொடுத்து நீ எண்ணியபடிக்கே இயற்றி விளையாடி மகிழ்க. என்றும் இறவா நிலையில் இன்ப அனுபவனாகி இயல் சுத்தமாதி மூன்றும் எந்நாளும் உன்னிக் கைவழி பெற்று வாழ்க-யாம் எய்தி நின்னுட் கலந்தேம் இனி எந்த வாற்றினும் பிரிவுறேம் என்ற குருவே.

34. தூங்கி விழுசிறியனைத் தாங்கியெழுகென்றெனது தூக்கந்தொலைத்ததுணையே.

சற்குருமணிமாலை—8. தத்துவமசி நிலை இது விது தானே.

17. வந்திரவிடை எனக்கருளமு தளித்தே.

23. பிறவாமல் இறவாமல் எனைவைத்த பெருக்கே வாதனைக்கிரங்கல் 4: ஏர் நீடும் பொருள் ஒன்று ஈந்து மகிழ்ந்தாண்டீர்.

8. எதுநினைத்தே னினைத்தாங்கே யதுபுரியுந்திறமும் இன்ப அனுபவநிலையும் எனக்கருளுவதற்கே இது தருணம் என்றேன் என்பதன் முன்கொடுத் தீர். என்புகல்வேன்என்புடை நும்மருள் இருந்த வாறே.

வரம்பில் வியப்பு 173-(4) கொணர்ந்தொரு பொருள் என் கரத்திலே கொடுத்த குருவை.

174-9: பொன் செயல் வகையை யுணர்த்தி என்னுளத்தே பொருந்திய மருந்தை.

175. குளவயினிறைந்த குரு சிவபதியை.

வரம்பில் வியப்பு 177-வது பக்கம். 30-எல்லாம் வல்ல வோர் ஞானப் பொருளெனக் களித்த மெய்ப் பொருளை.

அச்சோப்பத்து 4-அருளமுதுணவு கொடுத்தெனக்கு முன்னின்றனே.

அனுபவ ஈடு 4-ஞானவமுதளித்த தாயே! நான் நீ என்னும் பேதமிலா நடஞ் செய் கருணைகாவலனே.

அருட்கொடைப்புகழ்ச்சி 5-வேகாத காலைக் கொடுத்தாய்

6-மனக்குரங்கைக் கட்டிக் கொடுத்தாய்.

7-நற்பஞ்சகமும் ஒன்ருகக் கலந்து மரணநவை தீர்க்கும் கற்பங் கொடுத்தாய்.

கைம்மாறின்மை 6-செத்தாரெழுகெனச் சிந்தைசெய் யுமுன்னஞ் சிரித்தெழவே இத்தரணியி லருட் பெருஞ்சோதி எனக்களித்தாய்.

7- ஆக்கலொன்ரே தொழிலைந்தையும் தந்து.

சுத்த சிவநிலை—24. கூகாவென அடுத்தோர் கூடி யழாத வண்ணம்.

அநுபவ ஈடு 2 அருள் விளக்கமாலை 56.
சாகாவரமெனக்கே தந்திட்டான்

27. செத்தாரை யெல்லாந் திரும்ப எழுப்புதலிங்
கெத்தால் முடியும் எனில் எம்மவரே—சித்தாம்
அருட்பெருஞ் சோதி யதனுன் முடியுந்
தெருட் பெருஞ்சத்தியமீதே.

29. யான் புரிதல் வேண்டுங்கொல் இவ்வுலகிற் செத்தாரை
ஊன் புரிந்து மீளவுயிர்ப்பித்தல்—வான்புரிந்த
அம்பலத்தானல் லருளால் அந்தோநான் மேற் போர்த்த
கம்பளத்தால் ஆகுங் களித்து

திருக்கதவந்திறத்தல் 6-பூணவிழைந்தேனே வான் காணவிழைந்தேனே.

தலைவி தலைவன் செயலைத் தாய்க்குரைத்தல் } 7. ஏகசிவோகத்தை யெய்தினை

நற்றாய் செவிலிக்குக் கூறல் 2-சனிப்பிறப் பறுத்தேன் என்று உள்ளே களிப்புத் ததும்பினாள்.

5-இருமையும் என்போல் ஒருமையில் பெற்றார் யாண்டுளார்.

9-ஊழிதோறூழியுலவினு மூலவா உடம்பெனக் களித்தனன் என்றாள்.

அனுபவமாலை 31-அமுதளித்து என்கையகத்தே யொருபசும் பொற்கங்கணமும் புனைந்தார்.

44-பண்ணுறு மென் தனிக் கணவர் கூத்தாடுஞ் சபையைப் பார்த்தாலும் பசிபோமே.

52-கேழ்வரையில் அகம் புணர்ந்தே னவர் கருணை யமுதம் கிடைத்தது நான் ஆண்மகன்.

57-வாழிய வென்று ஆழி யளித்தெனது கையினிற் பொற் கங்கணமுங் கட்டினர்.

69 புத்தமுத மளித்த அருட்சித்தர்.

71-விடிந்தது, ஆணவமாங் காரிருள் நீங்கியது வெய்யவினைத் திரளெல்லாம் வெந்தது காண் மாயை ஒடிந்தது மாமாயை ஒடிந்தது திரை தீர்ந்தது பேரொளி உதயஞ் செய்தது.

75-நாயகனார் தனியுருவ நான்றழுவுந் தருணம் வான்புகழும் சுத்த சிவசாக்கிர மென்றுணர்ந் தோர்வழுத்து நிலையாகும்.

தனிப்பாடல்-விண்ணப்பம்-155. ஐவகைத் தொழிலு மென்பா லளித்தனை அது கொண்டு இந்நாள் செய்வகை தெரிவித்து என்னைச் சேர்ந்து ஒன்று யிருத்தல் வேண்டும்.

4-வது திருமுறை—

அருட்பிரகாசமாலை. 1

**சாகாவரம்**

சேந்தனார் கருவூர்த்தேவர், மாளிகைத்தேவர் முதலிய ஆன்றோர்கள் கூறியிருப்பது.

1. "அடியோ முகத்தருள் ளாரிந்து பிள்ளைப் பிறவி யது
நெறிந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே"

2. "பெருமையிற் சிறுமை பெண்ணொடாணென்
பிறப்பறுத்த பேரொளியோ"

3. "மற்றொரு பிறவியிற் பிறந்துபோய்க் கெடாவண் ணம்
காத்தெனக்கருளே புரிய வல்லர்" இதன்படி

ஒருவன் பிறத்தலில்லாமையை அடைய வேண்டுமானல் இறத்தலில்லாமை வேண்டும். மேலே கண்ட 1-வது பாட்டில் "பிள்ளைப்பிறவியறுக்க நெறி தந்த பித்தன்" என்றால் "இனி பிறவாமார்க்கமளித்த பித்தன்" என்பது பொருள். பிறவாமை வேண்டுமானல் சாகாமல் இருக்கவேண்டும். (2) என் பிறப்பறுத்த பேரொளி என்றால் "எனது ஜனனத்தினைக் கெடுத்த பெருஞ்சோதி" என்பது பொருள். இதனால்

இறப்பற்ருலல்லவோ பிறப்பறும். (3) "மற்ருெரு பிறவியிற் பிறந்துபோய்க் கெடாவண்ணம்" இனி யொரு பிறப்பு வாராதிருத்தல் வேண்டும் என்பது பொருள். பிறப்பறுத்த லாதியவைகளையே விளக்க மாக சாகாவரம் பெற்ருேமென்று மேலே கூறிய ஆன்ருேர்கள் சொல்லிவைத்தார்கள். இதனைத்தான் பிள்ளையவர்களும் சாகாவரம் பெற்றதாகக் கூறியுள் ளார்.

இதுதவிர, சிவஞான வள்ளலார் தாம் மெய்யா முடல் பொருளாவிகளைப் பெற்றதாகக் கூறியிருக் கின்றனர். "பொய்யாமுடல் பொருளாவியை வாங்கி யுன் பொன்னருளான் மெய்யாமுடல் பொருளாவியு மீந்த விரகையுன்னிப் பொய்யா மொழிகொடுன் பாதாம் புயத்தினைப் போற்றி யன்பாங் கையாலுனைத் தொழக்கண்டு கொண்டேம் கச்சியேகம்பனே" என் ருர். இவ்வாறு பெற்றதனை சாகாவரம் பெற்றதாகக் கூறியுள்ளார்கள். அதனையே பிள்ளையவர்களும் கூறி யுள்ளார்.

## ஓதா துணர்ந்தது

சுவாமிகள் கல்விகற்ற விதத்தை அவரதுசரித்தி ரத்தில் எழுதியுள்ளோம். இந்தப்படிப்பானது பாடுந் திறமையைக் கொடாதென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஓதாதுணர்தல் என்பது ஒருவரி டமும் கற்காமலே எல்லாவற்றையும் அறியும் திறமை. இதனைத்தான் எல்லாரும் சொல்லுவார்கள். திண்ணைப் பள்ளிக் கூடத்திலும், மற்றவர்களிடமும்

எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்து கொண்டால், அஃது இலக்கணம், இலக்கியம் வாசித்ததற்கு சமான மாகுமா? இல்லை என்ற விடைதான் யாருமளிப் பார்கள். எவராவர் எவ்வளவு எவ்வளவு படித் தாரோ அவரவர் அவ்வளவு அவ்வளவு கல்வியறிவு உடையவர்களாக விளங்குவார்களே யொழிய அதிக படிப்பாளியாக மாட்டார்கள். அடியிற்கண்ட பெரி யார்களின் சரித்திரங்களும் முதலில் உபாத்தியாயர் களால் அக்ஷராப்பியாசம் செய்யப்பட்டவர்களாக கூறுகின்றன. அவர்கள் பாடல்களில் ஓதாதுணர்ந்த தாகக் காணப்படுகிறது.

1. ஞானசம்பந்த சுவாமிகள்
2. திருநாவுக்கரசு சுவாமிகள்
3. அருணகிரி நாதர்
4. வென்றி மாலைக் கவிராயர்
5. குமர குருபர சுவாமிகள்
6. காளமேகப் புலவர்
7. யாழ்ப்பாணம் கந்தப்ப சுவாமிகள்
8. பொய்யா மொழிப் புலவர்

இறைவன் அருள் இல்லாவிட்டால் பாடும் திறமை ஏற்படாது. இது எல்லோருக்கும் தெரிந் ததுதான். மேற்கூறிய பெரியார்கள் இறைவனரு ளால் பாடியது போல நமது இராமலிங்க சுவாமி களும் இறைவனருளால் பாடினர்.

சத்தியப் பெருவிண்ணப்பத்தில் அடியில் கண்டபடி சுவாமிகள் கூறியுள்ளார். "குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியர் இன்றியே என்றரத்திற் பயின்றறிதற் *கருமையாகிய கல்விப்பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர், (*இறைவனைக்குறிக்கின்றது)

இரண்டாவது திருமுறை—தனித்திருவிருத்தம்-477-ம் பக்கம் :

"துரும்பினும் பற்றாத வென்னைப் பணிகொண்
டெல்லாம் ஓதாதுணர வுணர்த்தி யுள்ளே
நின்றுளவு சொன்ன நீதா" என்றார்.

---

## உண்மை நெறி.

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு.

1. ஏமசித்தி 3. தத்துவநிக்கிரஞ்செய்தல்
2. சாகாக்கல்வி. 4. கடவுணிலையறிந் தம்மயமாதல்

இவை பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு வகைப்படும்.

1. இந்திரிய ஒழுக்கம். 3. ஜீவ ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம். 4. ஆன்ம ஒழுக்கம்.

இந்த நான்கு ஒழுக்கங்களின் விவரம்.

### 1. இந்திரிய வொழுக்கம்

கொடிய சொல் செவிபுகாது, நாத முதலிய ஸ்தோத்திரங்களைக்கேட்டல்; அசுத்த பரிசஞ்செய்யா

திருத்தல்; குரூரமாகப் பாராதிருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவஇம்சை நேரிடுங்காலத்தில் எவ்வித தந்திரத்தாலாவது தடைசெய்தல்; ஜீவோபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும், திவ்விய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்; நன் முயற்சியிற் கொடுத்த லெடுத்தலாதி செய்தல்; மிதாகாரஞ் செய்தல்; மித போகஞ் செய்தல்; மல ஜலோபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்; காலபேதத்தாலும் உஷ்ணபாசத்தாலும் தடைநேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்த பரிச தந்திரத்தாலும், மூலாங்க பிரணவத்யான சங்கற்பத்தாலும் தடைதவிர்த்துக் கொள்ளல்; (மந்ததரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்; (தீவிரதரனுக்கு) எவ்வகையிலுஞ் சுக்கிலம் வெளிப்படாமல் நிறுத்தல்; இடைவிடாது கோசத்தை கவசத்தால் மறைத்தல்; இதுபோல் உச்சி, மார்பு, முதலிய அங்கங்களையும்மறைத்தல்; சஞ்சரிக்குங்காலத்தில், காலிற் கவசந் தரித்தல்; அழுக்காடைஉடுக்காதிருத்தல் முதலியவாம்.

## 2. கரண வொழுக்கம்

மனத்தைச் சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியினிற்கச் செய்தல்; துர் விஷயத்தைப் பற்றுதிருக்கச் செய்தல்; சீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்; தனது தத்துவங்களை அக்கிரமத்தில் செல்லாது தண்டித்தல் முதலியவாம்.

சிற்சபை: விந்து, அறிவு, பாவம் முச்சுடர், முச்சந்தி, முப்பாழ், நெற்றிக்கண், கபாடம், சபாத்துவாரம், மகமேரு, மூலம், சாகாத்தலை முதலிய ஒரு பொருட்கிளவியாம்.

### 3. ஜீவ வொழுக்கம்

ஆண் மக்கள் பெண் மக்கள் முதலியவர்களிடத்திலும் சாதி, சமயம். மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம்நீங்கி, எல்லவர்களும் தம்மவர்களாய் சமத்தில் கொள்ளுதலாம்.

### 4. ஆன்ம வொழுக்கம்

யானை முதல் எறும்பு ஈருகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு, யாதும் நீக்கமற, எவ்விடத்தும் பேதமற்று எல்லாருந்தானுக நிற்றலாம்.

இவ்வண்ணம் நின்ருல், மேற்குறித்த அரும் புருஷார்த்தங்கள் கைகூடும்.

வடலூர் பெருவெளியிலே, சத்திய தருமச்சாலையில் அடியவர் குழாங்கட்குச் சுவாமிகள் சன்மார்க்க போதனை செய்து வருங்கால் "இவ்வுண்மை நெறியைத் தமதுகையால் வரைந்து சுவரில் ஒட்டி வைத்து "இந்நெறியைப் பெற்றுய்யுங்கள்" என்று உபதேசித்தருளினர்கள்.

## தமிழ்ப் பாஷையின் சிறப்பு

சத்தியப் பெரு விண்ணப்பம் என்னும் தலைப்பின் கீழ் அடியில் கண்ட விஷயத்தைச்சுவாமி எழுதி வைத்துள்ளார்.

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போது போக்கையும், உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுதற்கும், அறிதற்கும், மிகவும் லேசுடையதாய், பாடுதற்கும், துதித்தற்கு மிகவு மினிமையுடையதாய், சாகாக் கல்வியை லேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென் மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்."

தமிழின் சிறப்பைப் பற்றி மேலே கண்டவாறு எழுதியிருப்பதுமன்றி "தமிழ்" என்னும் தலைப்பின் கீழ் அவர் எழுதிவைத்திருக்கும் கட்டுரை நாமெல்லோரும் கவனிக்கத்தக்கது.

### தமிழ்

தமிழ் என்பது த் - அ - ம் - இ - ழ் என்னும்

5. அலகு நிலையுடைத்து.

த் ம் ழ் — ஜடசித்கலை.

அ இ — சித்கலை

அ — அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதி நிலையக்கரமாம்.

இ — பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டிப் பேதங் காட்டும் ஜீவ சித்கலை யக்கரமாம்.

பதி சிதாத்ம கலைகளுக்காதார மாகி, உயிருக்கு உடலையொத்துக் குறிக்கப்படும்.

த் - ம் - ழ், எழுத்துக்களுக்கு உரை.

த் — ஏழாவது மெய்; ம் - பத்தாவதாகும்; ழ் - 15-வது. இயற்கை யுண்மைச் சிறப்பியலக்கரமாம், ஐந்தலகு நிலையும் உபயகலைநிலையும், மூன்று மெய்நிலையும்அமைந்துள்ளதும், சம்புபக்ஷத்தாரால்அநாதியாய் சுத்த சித்தாந்த ஆரிஷரீதிப்படி கடவுள் அருளாணையால் கற்பிக்கப்பட்டதும், எப்பாஷைகளுக்குள்ளும் பிதுர் பாஷை யென்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை யொன்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்த சித்தாந்தப் பதவுரை:—

த் — அ - தத்வரூபாதி சிவபோகாந்தமான தசகாரிய இயற்கை யுண்மைக் கட்டளை நிலையில் முன் அலகு நிலைப்பொருள் கூறிய விடத்துக்குறித்த ஏழாவது நிலையாகிய த்- என்பது சிவரூப இயற்கை உண்மைக் கட்டளையாம்.

அ — அகண்டாகார சித்கலாரூப ஓங்காரத் துட்பொருட் பிரதம விலக்கிய வியக்தியக்கரம்;

பன்னீருயிர் நிலையிற்றலையாய முதலக்கரமாதலில் அதுவே பிரமாதி பரசிவாந்த நவநிலைக்கும் அனாதி யாதி காரணமாயுள்ள வியற்கையுண்மைப் பரிபூரணப் பொருளிலக்கரம்.

என்னவே, சிவரூபமாகும். தகராகாசத்தில் சுத்த சிவமாகும் அருட்சோதியிணைந்துள்ள பூரணா னந்த ஸ்வரூப பரபதி வியக்தமாயிற்று.

ய்—இ. சங்காரப்பிரணவமாகிய மகாரம். முக் தான்மாக்களுக்கு ஒளிவண்ணச் சதானந்தமாயும், பெத்தான்மாக்களுக்கு இருள் வண்ணமல ரூபமா யும் இருந்து கற்பாந்தபிரளய முடிவின் சிருஷ்டிதிதி யாதிகளில் சிதான்ம சக்தியாகிய சீவனுக்கு அதி கரணமாகவும் முற்குறித்த பத்தாவது நிலயமாகிய ஆன்மாதாரமாகியுமுள்ள தெனப் பொருளாம்.

இ. பன்னீருயிர் நிலைகளில் மூன்றும் நிலையுயி ராகிய இகாரம் திரிகலா ஆன்ம வருக்கத்தில் அபார மாகிய சகலாகலரையும், பரமாகிய பிரளயாகலரை யும் கீழ்ப்படுத்தி, அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற் பட்டு நின்ற சுத்த விஞ்ஞான கலராகிய சிதாத்மாக் களைச் சுட்டுகின்றதாம்.

என்னவே, ஆதார, ஆதேயக் கூட்டுறவால் எல் லாந்தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள், பர பதி லக்ஷியமாகிய பூரணானந்தத்திற்கு அநுபவி களாக வுரியவர்களெனக் குறிக்கொள்ளல் வேண் டும்.

ழ்- இந்தச் சிறப்பியலக்கரம் பதினெண் மெய் களில் படி முடிபின் எண் குறிப்பில் நின்று, சிவ

யோக பூமியாகிய பரதகண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந்தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலுமில்லாததாயும், பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமையுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், இருக்கு, யஜுர், சாமமென்னும் சமஸ்கிருத வேதத்திரயப் பொருள் அனுபவத்தை யெளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அநுபவிக்கிறதற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ்சாக்ஷர முத்தொழிற் காரியமான பஞ்சதசாக்கரியால் பிரத்தியக்ஷாநுபவம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும்,

ஸ்ரீ மணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர் திருமூலர் முதலிய மகா புருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச் செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம், என்னும் பரமார்த்த ரகசியங்களை யுடையதும், பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகா சாரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து சுரஞான பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷியம் வியாக்கியானம், டீக்கா, டுக்கா, டிப்பணி முதலிய உரை கோள்கருவிகளைப் பொருள்கொள்ளத் தேட வேண்டியதாயும், அவ்வவைகளையும் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷியகாரர்கள், வியாக்கியானகர்த்தர்கள், டீக்கா வல்லபர்கள், டுக்கா சூசகர்கள் முதலிய

போதக உப போதகாசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம், என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல் பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலியிலேசாயும், கூட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும், எழுதவும், கவி செய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம், சொல்லாடம்பரம், போது போக்கு, பெருமறைப்பு, முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுருதிகளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால், ஆண்டன்மையைப் பொருந்தியதான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ். ற் ன். என்னும் முடி, நடு, அடி, சிறப்பியலக்கரங்களில், முடி நிலை இன்பாநுபவ சுத்த மோனநிதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை யுண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பிய லொலியாம்.

உரை கூறிப் போந்த சுத்த சித்தாந்த ஆரிடரீதி முப்பதவுரை பொழிப்புரை மருளியற்கை மல இருளைப் பரிபாக சக்தியால் அருளொளியாக்கி அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசக்தி யென்னும் சுத்த ஆன்மாவைத் தகர, ககன, நடன, அருட்பெருஞ் சோதியென்னும் சுத்த சிவானந்த பூரணத்தைச் சுத்த மோனநிதயியலால் அனுபவிக்கும் இயற்கை யுண்மையே தமிழ் என்னும் சொற் பொருள் சுட்டினவாறு காண்க.

இதன் கருத்து யாதெனில், தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்த சிவா நுபூதியைக் கொடுக்குமென்பதாம்.

தமிழின் சிறப்பைப்பற்றி சுவாமிகள் மாத்திர மன்றி மற்ற பெரியார்களும் புகழ்ந்துள்ளார்கள்.

தேவாரம்—"கண்ணு யேழுலகுங் கருத்தாயருத்தமு மாய்
பண்ணுரின்தமிழாய்ப் பரமாய பரஞ்சடரே"

திருவாசகம். "தண்ணுர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை"

திருப்புகழ்—"முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே"

சேக்கிழார்-"ஞாலமளந்த மேன்மைத்தெய்வத்தமிழ்"

திருக்கோவையார், "உயர்மதிக் கூடலினுய்ந்த வொண்டீந்தமிழின்,

தமிழ்ப் பாஷை தெய்வத்தன்மையுடைய தென்பது இதனடியில் காட்டியிருக்கும் அற்புதங்களால் நன்கு விளங்கும்.

1. பூம்பாவை இறந்து தகனம் செய்யப்பட்டாள். அவ்வம்மையின் எலும்புகளைக்குடத்தில் எடுத்துப்பத்திரமாய் வைத்திருந்தார்கள். திருஞான சம்பந்த சுவாமிகள் அந்த ஊருக்கு வந்தபோது குடத்திலுள்ள எலும்பைக் காட்டி அது எதற்காக வைத்திருக்கப்பட்டதென்பதையும் சுவாமிகளுக்கு விவரமாகக் கூற, அவர் அவ்வெலும்பைப் பதிக மோதிப் பெண்ணுருவாக்கினர்.

2. கூன் பாண்டியனது தீராத சுரநோய் தீர்ந்தது. கூனை நிமிர்த்தியது. மருகல் க்ஷேத்திரத்தில், பாம்பு கடித்திறந்த வணிகர் ஒருவரைப் பதிகமோதி உயிர் பெறச் செய்தது.

4. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழில் பதிகம் பாடி நென்மலே குவித்தார். பஞ்சத்தைப்போக்கினர். பொற் கட்டிகளேப் பெற்ருர். முதலே விழுங்கிய பிள் ளேயை உயிருடன் வரவழைத்தார்.

5. திருநாவுக்கரசு சுவாமிகளே சுண்ணும்புசுடும் எரிகுழியிற்றள்ளியும் அவர் சாகாமல் தமிழில்பதிகம் பாடி ஏழுநாட் சென்றபின் வெளிவந்தார். கற்றூ ணிற் கட்டிக் கடலில் போடப்பட்டும், கற்றூணே தெப்பமாய் ஆயது.

இன்னம் பலவற்புதங்கள் உள.

பெரும்பாலும் சர்வகலாசாலே மாணவர்கள் இத் தகைய தமிழ்பாஷையின் பெருமையையறியாது அசட்டை செய்கின்றனர். தமிழ்ப்பண்டிதர் வகுப் புக்கு வருவதே அவர்களுக்கு ஒரு வேடிக்கை. அவர் போதிக்கும் விஷயத்தைக் காது கொடுத்து கேட்ப தில்லே. ஏன்? இந்தபாஷை அவர்களுக்கு இம்மை யில் பயன்படுவதில்லே, யென்ற எண்ணமே அவர்கள் மனதில் குடிகொண்டு வருகிறது. ஆங்கிலபாஷை இம்மைக்கு மாத்திரம் பயன்படும். தமிழ்பாஷையோ இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும். இதனேவிவ ரிக்கில் பெருகும்.

### சமய சூக்கும பஞ்சாட்சரம்

சமய சூக்கும பஞ்சாட்சரத்தின் தாத்பரியம் நான்கு. அதன் அக்கரம் ஐந்து.

சிவாயநம. இதன் தாத்பரியம் நான்குவகை. பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் என் பனவாம். சிவனே நமஸ்கரிக்கின்றேன் என்பது

பூர்வத்தின் அர்த்தம். அநாதியில் மலமின்றியும் எல்லாமுடைய சிற்சத்திக்கு எனதுகரணாங்களைச் சமர்ப்பிக்கின்றேன் என்பது பூர்வ பூர்வத்திற்குத் தாத்பரியம்-உத்தரம் உத்தரோத்தரத்தை அனுபவத்தாலறிக. இதுபோல் மத சன்மார்க்கத்திற்கும் ஷ அக்ஷரமே. மேற்குறித்தபடி இதற்கும் நான்கு தாத்பரியமுள்ளது.

பூர்வத்தின் தாத்பரியம்.

சி = பதி ;
வா = சக்தி ;
ய = ஜீவன் ;
ந = திரோதை ;
ம = மஹாமாயை ;

ஆதலால் மஹாமாயை திரோதைநீங்கி ஜீவபேதமற்று அருள்வடிவாய் சிவமாவது.

பூர்வ பூர்வத்தின் தாத்பரியம்

சி = எல்லாமுடையது ;
வா = அபின்னமாகிய அருள் ;
ய = ஆன்ம சிற்சாயை ;
ந = ஜீவன் ;
ம = பசு ;

ஆதலால் பசுத்தன்மை கெட்டு, ஜீவபேதம் போய், ஆன்ம இயற்கை வடிவாய்ச் சத்துவமயமாய் எல்லா முடையதுவாய்ப் பூரணமாய் நிற்றல். ஒருவாறு அனுபவத்தில் பரவிந்து பரநாதம்

பரத்திலும், அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும். இவ்வளவும் ஜெபமூலமாய்க் கரணசுத்தி வந்து அக்ஷரம் உன்னுதலைவிட்டு அறிவாகிருதியாய் கருணையுஞ்சிவமே பொருளெனும்படி நின்றார்க்கு முதற்றுவாரமாம்.

மற்ற உத்தரத்தில் ஏமசித்தியும், உத்தரோத்தரத்தில் தேக சித்தியும் சொல்லும். இஃது மதசன்மார்க்க அனுஷ்டானம். இதுபோல சமயத்திலும் தேகசித்தி, ஏமசித்தியுள்ளது. மேற்குறித்த சமய மதங்களில் விரிவு அனந்தங்கோடி. அந்தச்சித்திகள் யாவற்றும் அவ்வச்சமய மதங்களின் கர்த்தா, மூர்த்தி, தலைவன் தலைவி, முதலியவர்கள்பதப்பிரஸ்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேம்குறித்த இரண்டு சித்தியும் எக்காலத்தும் அழிவுறுதிருப்பதாகச்சொல்லுவது சுத்த சன்மார்க்க பூர்வோத்தரம். ஏமசித்தி தேகசித்தி மேற்குறித்த சூக்கும பஞ்சாக்கரத்தில் சொல்வதற்குப் பிரமாணம்.

"சிவாய நமவெனச் செம்பு பொன்னாய்விடும்"
—திருமந்திரம்:

"சிவாய நமவெனச் சிந்தித்திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை."
—ஔவையார்

ஆதலால் மேல் குறித்த அக்கரத்தை மகான்கள் குழூஉக்குறி வடிவமாய்ச் சுட்டினார்கள். இதைச் சுகவநுபவர்கள் தத்துவார்த்தங்களாயறிந்து அநுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினாலுன்னிக் கரமோய்ந்தால் தத்துவாநுசந்தானஞ் செய்யக்

கூடும். உலகிகள் நாவினுலுரைக்கத்தங்கள் மனோர தம் சித்திக்கும். வகரவித்தையுடையவர்கள் ஷி அக் கரத்தினுண்மையைப் பௌதிகம், உலோகம், ஒஷதி, லவணம் முதலியவைகளிற் சேர்த்து வகரத்தை முடிப்பார்கள். தகரவித்தையுடையவர்கள் அதுபோல வேயமைத்துக்கொண்டு தேகத்தை நீடிக்கச் செய் வார்கள். ஆதலால் மேற்குறித்த அக்கரங்கள் பரி பாஷையாக இருக்கின்றன. உண்மையாவற்றும் சுத்த சன்மார்க்க சகஜசாத்திய ஞானநுபவிகட்கு விளங்கும்.

மேலும் சி—என்னும் எழுத்துக்குப் பொருள் :- ஒருவாறு இதிலடங்கிய பீஜம்-ஐந்து; அவையா வன :

1. தோன்றி அசைதலாகியவிந்து.
2. அதன்புடை பெயர்ச்சி ஒலியாகிய நாதம்.
3. அதன்வர்ணவடிவமாகிய அக்கரத்தின் சகரமெய்.
4. அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய பிரணவ மூல ஆகாசம்.
5. இதைத் தன் வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகாரம்.

கூடிய விந்துக்கள் ஐந்தும் ஒருருவ்மாய்ச் சிகர மாயிற்று. இதனிலக்கணம் விரிக்கிற் பெருகும்— அநுபவத்தாலறிக.

## சன்மார்க்கக் கொடி

இதனுண்மை யாதெனில், நமது நாபி முதல் புருவமத்தி யீருக ஒரு நாடியிருக்கின்றது. அந்நாடி யினுனியில் புருவமத்தியி னுட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகிறது. அதற்கு அடிப்புறம் வெள்ளை வருணம். மேல்புறம் மஞ்சள் வருணம். அச்சவ்வின் கீழ் ஒரு நரம்பு ஏறவும் இறங்கவுமிருக்கின்றது. இக் கொடி நம்மனுபவத்தின்கண் விளங்கும்.

## வேதாகமம்

வேதம்—பசு லக்ஷணத்தை விளக்கும். ஆகமம்—பதி லக்ஷணத்தை விளக்கும். புராணம்—பாச லக்ஷணத்தை விளக்கும். இதிகாசம்—பத்தியை விளக்கும். ஸ்மிருதி—கர்மத்தை விளக்கும். மேலும் வேதம் - பதி, பசு, பாசத்தைச் சொல்லும். அது போல் ஆகமமும் சொல்லும். வேதமென்பது நான்கு மகா வாக்கியந்தான். அவற்றில் அங்க, உபாங்க, சாங்க, பிரதியாங்கங்கள் உண்டு.

ஒருவன் ஆன்மலாபம் பெறுவதற்கு இரண்டு மார்க்கம். ஒரு மார்க்கம் படியுள்ளது. ஒரு மார்க்கம் படியில்லாதது. எப்படியெனில், மெத்தை ஏற வழியிருப்பது போல, ஏறிவிட்டால் மேலிடமாகிய அரமியம் ஒன்றே அவ்வழி. ஆகமவழி சௌபான முடையது. வேதவழி சௌபானமில்லாதது. ஒருவன் ஆகமவழி செல்லாது வேதவழி போகக்கூடாது. ஏனெனில் ஜீவன் உபாசனு துவாரமாய்ச் சீவத்துங் கெட்ட இடத்தில் இரண்டற்று ஒன்ருகிய வேதவழி யென்றும் அத்துவைதம் மறுதலைக்கும் - வேதவழி

யான அத்வைதம் அனுபவம் என்பவருக்கும், ஆகம வழியான துவைதம் விவகாரம் ஒன்றெனவிவகரிப்ப வருக்கும் அனுபவமில்லை - ஏனெனில் உபதேச ரீதி யில் செல்லாது.

## சிவம்

சிவம்—சச்சிதானந்தம்

சி - சத்து ...(1) எல்லாம் உள்ளதாய் விளங்குவது.

வ - சித்து ...(2) எல்லாம் விளங்குவதாயுள்ளது.

ம் - ஆனந்தம்...(1&2) இவ்விரண்டினாலும் நிரம்பிய இன்பம்

[ஆனந்தம் என்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களுக்குத் திருப்தியாய் சந்தோஷிப்பித்துத் தான் அதிசயமின்றி நிற்பது ]

பசு - என்பது முற்றும் மலம் உடையது.

ஜீவன் - மூன்று பங்கு மலம் உடையது.

ஆன்மா - ஒரு பங்கு மலம் உடையது.

சிவம் - முற்றும் மலமில்லாதது.

மலம் முற்றும் நீங்கி தயாவடிவமாவதே சிவம்.

## மனித தேகத்தில் சுவர்க்கம், நரகம் இருக்குமிடம்

மனித தேகத்தில் சுவர்க்கம், நரகம் தவிர, பிரம பதம், விஷ்ணு பதம், ருத்திர பதம், மயேசுர பதம், சதாசிவபதம் முதலிய பதங்களும் உள்ளன.

இந்த மனித தேகத்தில் - கண்டம் முதல் உச்சி வரையில் சுவர்க்கம் என்று பெயர்; நரகம் - நர

காதிகளுக்கு இடம் உந்தி முதல் குத பரியந்தம். இயமனிருக்கும் இடம் குதத்திற்கு இடதுபாகம்.

**கற்ப பேதம் என்பது**

கடவுள் இடபவாகன ரூடராய் உலகத்திலே எழுந்தருளி காக்ஷி கொடுத்து அருளுங்காலம். [இடபம் என்பதற்குப் பொருள் தரும சொரூபம், காருண்யம், தயை.]

**காரணம் என்பது**

கரண சம்பந்தமுடையது. கரணம் என்பது மட்குடத்தைப் போல ஒற்றுமை வேற்றுமைத் தொழிற்றன்மை உடையது.

**பவுதிகம்**

வீரம், பூரம் முதலிய 64 சரக்கு.

**ஏமம்**

ஏமம் - கனகம் - சூரியனைக் குறிக்கின்றது. சூரியனிடத்தில் பொன் இருக்கின்றது.

**சினம், வெகுளி**

சினம் - உள் வேக்காடு புடஞாயம் போல, இது சீக்கிரம் நஷ்டம் செய்யும்.

வெகுளி - மீசை துடித்தல், கண் சிவத்தல், கை, கால், உடம்பு முதல் துடித்தலாதியாகி அதை வெளிப்படையாகக் காட்டுதல். இதுவும் தேகத்தை நஷ்டம் செய்யும்.

ஆகையால் எந்தவகையாயினும் கோபம் கூடாது. ஒழிக்க வேண்டியது அவசியம்.

**தூக்கம்**

தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும் ஒருவன் இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கம் செய்வானுனுல் அவன் ஆயுள் நீடித்திருக்கும். எப்போதும் மறப்பின்றி ஆசானுடைய திருவடியே ஞாபகஞ் செய்துகொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஹேதுவாம்.

**இந்திரியக்காட்சி, கரணக்காட்சி**

இந்திரியக்காட்சி - ஒரு வஸ்துவை நாம் ரூபமின்றிக் காணுதல்.

கரணக்காட்சி - அந்தவஸ்துவை நினைத்துஅதை அனுபவிக்க வேண்டும் என்கிற சித்தவிருத்தி உண்டாதல்.

**ஆசை**

ஆசை என்பது காமம் அல்லது இச்சை. இச்சித்தபொருளைத் தன் வசப்படுத்த எழுவது மோகம்.

ஆதலால் எந்த வஸ்துவினிடத்திலும் மோகம் காமம் முதலியவை அவா மாத்திரமாய் இருப்பது மேற்படி காட்சி. சன்மார்க்கத்தில் அத்தகைய அவா ஏகதேசமுங் கூடாது.

**பரோபகாரம் என்பது**

தேகத்தாலும், கரணத்தாலும், இந்திரியத்தாலும், திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தலாம். திரவியம் நேராத பட்சத்தில் திரிகரணசுத்தி

யாய் ஆன்ம நேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களது வாட்டத்தைக்குறித்துப்பிரார்த்தித்தல்.

சத்விசாரம் என்பது

கடவுளினது தரத்தையும், பெருமையையும், ஆன்மாவின் தரத்தையும், சிறுமையையும் இடைவிடாது விசாரித்து, நமது குறைகளைக் கடவுளிடத்தில் விண்ணப்பிப்பது. சிவாநுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு துவாரந் தவிர வேறில்லை—தயை இருவகை—யாதெனின், கடவுள் தயை, ஜீவதயை என்பனவாம்.

கடவுள் தயை என்பது, இறந்த உயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல். மிருகம், பக்ஷி, ஊர்வன ஆதிகளுக்கு ஆகாரம் நேதியின்படி அருட்சத்தியாலூட்டி வைத்தல்— சோம சூரியாக்கினிப் பிரகாசங்களைக் காலதேயவண்ணம் பிரகாசிப்பித்தல், பக்குவிகளுக்கு அநுக்கிரகித்தல்—அபக்குவர்களைக் கொல்ல வேண்டிய அருள் நியதிப்படி தண்டனை செய்வித்துப் பக்குவம்வருவித்தல். ஜீவதயையென்பது, தன் சத்தியினளவு உயிர்களுக்கு உபகரித்தல், அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றி தயாவடிவமாயிருத்தல்.

## புருவமத்தியின் விசேடம்

இதற்கு விந்துஸ்தானமென்றும், அறிவிடமென்றும், பாலம் என்றும், லலாடமென்றும், முச்சுடரிட

மென்றும், முச்சந்தி மூலமென்றும், முப்பாழ் என்றும், நெற்றிக்கண் என்றும், கபாடஸ்தான மென்றும், சபாத்துவார மென்றும், மகா மேருவென்றும், புருவமத்திய மூலம் என்றும், சித்சபா அங்க மென்றும் பெயர். ஆதலால் விந்து என்பதே ஆன்மா. விந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கத்திற்கு இடம். இதுவே பூர்வத்தில் விந்துவாயும், உத்தரத்தில் நாதமாயும் இருக்கின்றன. விந்து,—ஆன்மா, நாதம்—பரமான்மா. நாதத்தோடு விந்து சேருதலால் விந்துசத்தியும், நாதம் சிவமுமாகின்றது.

## ஜீவகாருணிய மகிமை

ஜீவகாருண்யத்தால், பிரமனுயுசும், பாசவைராக்கியத்தால் விஷ்ணுவாயுசும், ஈஸ்வரபக்தியால் உருத்திரனுயுசும், பிரமஞானத்தால் என்று மழியாத சுவர்னதேக முதலியவைகளையும் பெற்றுக் கடவுள் மயமாகலாம்.

எப்படியெனில், கடவுள் சர்வஜீவதயாபரர். சர்வவல்லப முடையவர். ஆகையால், அவர் நம்மையும் சர்வஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார். ஞானிகளுக்குத் தயவு அதிகப்பட்டு இருக்கிறபடியால் அவர்கள் கேளாத கேள்வி முதலிய மகாவற்புதங்களான இறந்தாரை எழுப்புதல் முதலிய வல்லபத்தைப் பெற்றிருக்கின்றார்கள். எந்த சீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள்

விசேஷம் விளங்குகின்றதோ அந்தச் சீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும். மற்றையர்களிடத்திற் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக் காலங்களில் கடவுளிடத்திலன்பும் ஜீவர்களிடத்தில் தயையும் செலுத்த வேண்டும்.

அன்புண்டானல் அருளுண்டாகும். அதனல் சிவானுபவ முண்டாகும். தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்களேற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்சம் பற்றிச் சாதிகளேற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பது சமயவேற்பாடு சாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாடு.

ஆசாரங்களாவன : சாதியாசாரம், குலாசாரம், ஆசிரமாசாரம், லோகாசாரம், தேகாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம்,சாதனசாரம், அந்தராசாரம், சாஸ்திராசாரம், முதலியவாம். அவ்வாசாரங்களை ஒழித்துச் சுத்தசிவ சன்மார்க்க சத்தியஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தாலொழிய மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடாது.

## பஞ்சகௌவியம்

கோமயம், கோஜலம், பால், தயிர், நெய் இவற்றின் குணமாவன: மயத்தால் பிருதிவி சுத்தி ; ஜலத்தால் ஜலசுத்தி ; நெய்யால் அக்னி சுத்தி; தயிரால்

வாயுசுத்தி; பாலால் ஆகாய சுத்தி. இதுபோல் பிண்டத்தில் பிருதுவியாகிய தேகத்திலுள்ள குற்றங்களையும், அசுத்த மலங்களையும், மேல் சொன்ன கோமயம் போக்கும். நீர்க்கட்டு, நீர்க் கோவை முதலியவற்றைக் கோஜலம் போக்கு. உஷ்ணபாகம் முதலியவற்றை நெய்போக்கும். வாயுவின் கெடுதியாகியமல பந்த முதலியவைகளைத் தயிர் போக்கும். ஆன்மாவாகிய பிராணச் சோர்வை க்ஷீரம் போக்கும். நக்ஷத்திர விருக்ஷத்தின் மூலாதார பலன்களே பஞ்சகவ்வியங்களாம்.

## நித்திய வொழுக்கமென்னும் உலகியல் குறிப்புகள்

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கிஎழுந்து விபூதிதரித்துச் சிறிது நேரம் உட்கார்ந்து கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல் வேண்டும். பின் பலஜல உபாதைகளைக் கழித்தல் வேண்டும். இதன்பின், செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள், இவைகளில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும், கைகால் முதலிய உறுப்புகளிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரினால் பற்றறத்துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி, ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து, அதன்பின் கரிசலாங் கண்ணித்தூள் கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு, பொற்றலைக் கையாந்தகரையிலை அல்லது கரிசலாங் கண்ணியிலை ஒரு பங்கு, தூதுளையிலை, முசுமுசுக்கையிலை கால்பங்கு, சீரகம் கால்பங்கு இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சூரணமாகச் செய்து

கொண்டு அதில் ஒரு வராகனிடையை ஒருசேர் நல்ல சலத்திற் போட்டு அதனுடன் ஒரு சேர் பசுவின்பால்விட்டுக் கலந்து அதிலுள்ள ஒருசேர் சலமுஞ் சுண்டக் காய்ச்சி அந்தப் பாலில் நாட்டுச்சர்க்கரை சேர்த்து சாப்பிடல் வேண்டும். பின்பு இலேசான முயற்சியில் சிறிது வருத்தந் தோன்ற முயலுதல் வேண்டும். பின் இள வெந்நீரில் குளித்தல் வேண்டும். விபூதிதரித்து சிவசிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல் வேண்டும். பசி கண்டவுடன் தடைசெய்யாமல் ஆகாரம் புசித்தல் வேண்டும். போஜனம் செய்தபின் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடித்தல் கூடாது. பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் புளி, மிளகாய் சிறிதே சேர்க்கவேண்டும். மிளகு சீரகம் அதிகமாய்ச் சேர்க்க வேண்டும்.

உப்பு குறைவாகவே சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம்.

சர்க்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச்சாதம் முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது.

புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. சுக்கைச் சுண்ணாம்பு தடவிச் சுட்டு மேலழுக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு, நல்ல சலத்தில் கொஞ்சம் போட்டு, 5 பங்கில் 3 பங்கு நீர் சுண்ட 2 பங்கு நீர் நிற்கக் காய்ச்சி அதைத் தாகங்கொள்ளுதல் வேண்

டும். நேராத பக்ஷத்தில் வெந்நீராவது கொள்ள வேண்டுமே யன்றி குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது.

பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத்தெழுந்தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப் படாது. ஆயினும் நித்திரை வரும்படி படுக்கப் படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரையாகாது. பகற் போஜனஞ் செய்தபின் சற்று நேரங் கடவுளைத் தியானித்தல் வேண்டும். இராத்திரி முன்பங்கில் தேகசுத்தி செய்து விபூதி தரித்து சிவத்தியானம் செய்தல், தோத்திரஞ் செய்தல் முதலியவை கூடும். பின் போஜனம் செய்தல் வேண்டும். இராப் போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல் வேண்டும். பின்பு தியானஞ் செய்தல் வேண்டும்.

இரவில் தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்கவேண்டும்.

படுக்கும்போது இடது கை பக்கமாகவே படுத்தல்வேண்டும். பின்பு 7½-நாழிகை அல்லது 10-நாழிகையளவு நித்திரை செய்தல்வேண்டும்.

எப்போதும் பயத்தோ டிருக்கப்படாது. பரிச்சேதம் பயமில்லாமலிருக்கவும் படாது. எப்போதும் மன உற்சாகத்தோ டிருக்கவேண்டும். கொலை, கோபம், சோம்பல், பொய்மை, பொறாமை, கடுஞ்சொல் முதலிய தீமைகள் ஆகா. உரத்துப் பேசுதல் வேகமாய் நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா. எந்தவிதத்திலும் பிராண

வாயு அதிகமாக செலவாகாதபடி ஜாக்கிரதையோடு பழகுதல் வேண்டும்.

ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்திற்கொரு தரம் வெள்ளைக்காக்கட்டான் முதலான விரோசனம் வாங்கிக்கொள்ள வேண்டும். பொற்றலைக் கையாந்த கரையை உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு 4- நாளைக்கு ஒருதடவை வெந்நீரில் முழுகுதல் வேண்டும். அன்றி வாரத்திற்கொரு தடவையாவது முழுகுதல் வேண்டும்.

இரவில் தீபமில்லாதவிடத்தில் இருக்கப்படாது. ஏனெனில் அது ஆயுள் நஷ்டத்தை உண்டுபண்ணும். ஆகையால் நாம் வாழ்கிற வீட்டில் தீபத்தை வைத்து ஆயுளை விர்த்தி செய்து கொள்ளல்வேண்டும். வீட்டில் எந்த இடத்திலும் தீபம் வைத்திருக்க வேண்டியது அவசியம். இருள் இருக்கப்படாது—ஒரு வீட்டில் தீபம் வைத்தால் அந்த வீட்டிலிருந்த இருளெல்லாம் அந்தத் தீபத்தில் அடங்கிச் சேரும். அதுபோல இந்தச் சீவனுகிய தீபம் இருக்கிற இடத்தில் விளக்கில்லாவிட்டால் அந்த இடத்திலிருக்கிற இருளெல்லாம் சீவனுகிய தீபத்தைச் சேர்த்து தேக நஷ்டத்தையுண்டு பண்ணும். சர்க்கரையும், இலவணத்தைத் தூசுபோக்கி ஐயலவணமாய்க் கட்டிய கட்டியும் ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். சர்க்கரை புழுத்தலின்ருகலின் உத்தம ஆகாரமாம்.

தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும். ஒருவன் இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானுனல் அவன் ஆயுள் நீடித்திருக்கும்.

## சாதாரணமாய் வழங்கும் பழமொழிகளும் சொற்களும்.

**முதல் திருமுறை :**

315. கோபத்தால் நாய்போல் குரைத்தல்.

**விண்ணப்பக் கலிவெண்பா:**

320. இருகால் மாடுபோல்.
321. கொள்ளிவாய்ப் பேய்போல்.
322. கள்ளுண்ட பித்தனைப்போல்.
324. பாதகமென்றால் பாற்சோறு.
328. கோளுரை என்றால் கொண்டாட்டம்.
325. வாய்மை வாய்மட்டும்.
327. புண்ணியமென்றால் போராட்டம்.
338. வெண்சோறு கிடைத்தால் அதுவே சொர்க்கம்.
340. சண்டை தாய்தந்தை.
404. தாமரையில் நீர் போல் தயங்குதல்.
405. உள்ளம் நீராய் உருகுதல்.
406. நெஞ்சம் அலை பாய்தல்.
408. ஆற்றிலொரு காலும் சேற்றிலொரு காலும்.
410. பாம்பின் வாய் தேரைப் போல்.
411. வலைப்பட்ட மான் போல்.
412. வெள்ளத்தில் தோற்றும் சுழி.

**நெஞ்சறிவுறுத்தல்**

12. போக்கு வரத்துமிலா.

சிவநேச வெண்பா

18. சிறியான் பயமறியான்.
19. சுவருண்ட மண்போல் சோறுண்டேன்.
37. பூவை விட்டு புல்லெடுப்பார் போல்.
56. எட்டி மரமானாலும் பச்செசன்றிருக்கப் பகர்வார்கள்.
63. வேழத்தின் எச்சங் கண்டாற்போல்.
64. பகல் வேடத்தார்க்கு.

மகாதேவமாலை

49. ஆன் காணு இளங்கன்ருய் அலமந்தேங்கும்
51. வாழைப்பழம் போல விழுங்கும்.
73. மத்தேறியலை தயிர்போல்.
76. கிழக்குருடன் கோல்போல்.
80. உருள் சகடக்கால்போல்.
81. எறும்பே போல் திரிந்து
பெற்றவளைக் காணுத'பிள்ளைபோல்.
82. குரங்கின் கைமாலையென.
84. பொள்ளென மெய்வியர்க்க
உளம் பதைக்க.
85. மணையறியாப்பிழை கருது மகிழ்நன்போல்
தனையறியா முகத்தவர் போல்.
86. நாவினை விட்டெருது கறந்திடுவான்.
89. செம்மரம் போல் தணிந்த நெஞ்சேன்.
94. கொண்டுகுலம் குறிப்பதுண்டோ.

திருவருண் முறையீடு

123. வாய்க்கு பழத்தொடு சர்க்கரை
வழங்குவேன்.
167. வெறும் வாய் மெல்லுகின்றோர்க்கு
ஒரு நெல்லவல் வாய்க்கில் விடுவரன்றே.
168. சிரிடுவார் பொருட் செல்வரிகலாமல்.
169. பாலுக்குங் காவல் வெம்பூனைக்குந்
தோழன்.
171. ஆண்மகன் பெண்வேடங் காட்டு
முறைமை.
181. கலங் கவிழ்ந்தார் மனம் போலே.
187. சூடுண்ட பூனை.
190. மாமத்தினுல் சுழல் வெண்டயிர் போல்.
209. மருமத்திலே பட்ட வாளியைப்
போன்று வருத்துவதே.

வடிவுடை மாணிக்கமாலை

46. சோற்றுக்கிளைத்தோ மாயினும்
யாஞ் சொல்லுக் கிளையோம்.
102. | கைக்கணிறைந்த தனத்தினுந் தங்
166. | கண்ணிறைந்த கணவனை
154. காலம் போகும் வார்த்தை நிற்கும்.
164. சோற்றுக்கருப்பேன்.

## இரண்டாவது திருமுறை

அருள் நாம விளக்கம்

107. இலவுகாத்த கிள்ளைபோல்.

நெஞ்சைத்-தேற்றல்: 5

4. அழுதபிள்ளைக்கு பால் கொடுப்பார்கள்.

